மல்கியா 4:2

யோவான் 17:17

நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 124* ஜூன் *2026*

# கர்த்தருக்குக் காத்திருப்பது

## *(Faith Foundations – Br. Morton Edgar, pp.163-174)*

*"கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது"*
*(புலம்பல் 3:26)*

*1.* இரட்சிப்பின் திட்டமானது அதின் காலங்கள் மற்றும் சமயங்களுக்கு ஏற்றவாறு அதற்கு நியமிக்கப்பட்ட பாதையில் முன் செல்லும். அந்த காலங்களையும் சமயங்களையும் மாற்றுவதோ துரிதப் படுத்துவதோ கூடாத காரியமாக இருக்கிறது. சர்வ சிருஷ்டியும் தேவனுடைய நற்சித்தம் வெளிப்படுவதற் காகக் காத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டின் புரிந்துகொள்ளுதலைப் பெற்றுக் கொண்டவர்கள், உலகத்தாரைப் போல் அறியா மையில் காத்திருப்பதில்லை. கர்த்தருடைய காலங்களே மிக சிறந்தவைகளென்று விசுவாசிப்பதால் தேவனுடைய பிள்ளைகள் காத்திருக்கிறார்கள். உலகத்தின் பிள்ளை களோ காத்திருக்கக் கட்டாயப்படுத்தப்பட்டதால் காத்திருக்கிறார்கள் (ரோம. 8:19-23).



### விசுவாச உண்மைத்துவத்துடன் காத்திருப்பதின் வெகுமதிகள்

*2.* சோதனைகள் மற்றும் பரீட்சைகளின் மத்தியில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப் படுவதற்காக விசுவாச உண்மைத்துவத்துடன் காத்திருந்த சில மூப்பரான பாத்திரவான்களுக்குக் கர்த்தர் எவ்வாறு விசேஷமான வெகுமதிகளைக் கொடுத்தார் என்பதை நினைவு கூருவோமாக. நோவா பேழையைக் கட்டின பிறகு ஏழு நாட்களுக்கு ஜலப் பிரளயத்திற்காகக் காத்திருந்தார் (ஆதி. 7:10). இந்த கடைசி காலப்பகுதி குறுகியதாக இருந்தாலும் நோவாவுக்கு ஒரு பெரிய சோதனை காலமாக இருந்திருக்கும். நோவா அதைப் பொறுமையோடு சகித்தார். ஜலம் பெருகி பேழையைக் கிளம்பப்பண்ணி, நோவா மற்றும் அவருடைய வீட்டார் மட்டுமே இரட்சிக்கப்பட்டபோது, நோவா விசுவாச உண்மைத்துவத்துடன் காத்திருந்தது சரியானது என்று மெய்ப்பிக்கப்பட்டது.

*3.* ஆபிரகாம் *25* வருட நீண்ட காலத்திற்குக் காத்திருந்த பிறகு எல்லா வாக்குத்தத்தத்தின் மையமான குமாரரை ஜெநிப்பிக்கும் சந்தோஷத்தைக் கண்டடைந்தார். அந்த குமாரரை மையமாகக் கொண்ட வாக்குத் தத்தங்களின் நிறைவேறுதலுக்காக அவர் இப்போதும் காத்துக் கொண்டிருக்கிறார். அவர்களுடைய சுதந்தர வாளிகளாகிய ஈசாக்கும், யாக்கோபும் அவ்வாறே காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வாக்குத்தத்தங்கள் எவ்வளவு நிச்சயமானவைகளென்றால், இந்த மூன்று

## தூது நிரல்

*1.* கர்த்தருக்குக் காத்திருப்பது................................*1*
*2.* பரிசுத்த ஆவி : அதின் ஆண்டு கொள்ளும் குணநலன்கள் – பகுதி *3*— நீதி............................*7*
*3.* திராட்ச கிளைகளின் வளர்ச்சி..........................*17*
*4.* ஒரு இரட்சண்ய நாள்.........................................*21*

முற்பிதாக்களும் "தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு ... விசுவாசத்தோடே மரித்தார்கள்" (எபி. 11:13). அவர்கள் என்னே மேன்மையான மனிதர்களாக இருந்தார்கள். தேவனிடத்தில் விசுவாசத்துடன் அமைதியாக ஜீவிக்கிற ஒரு மனிதனைக் காட்டிலும் அதிக அதிசயமான காரியம் பூமி முழுவதிலும் வேறொன்றுமில்லை.

*4.* மோசேயின் சகோதரர்களின் இரட்சகராகத் தேவன் அவரை நியமிப்பதற்காக அவர் வனாந்தரத்தில் 40 வருடங்களுக்குக் காத்திருந்தார். தேவனுடைய ஜனங்கள் நாலாம் தலைமுறையில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை மோசே விசுவாசித்தார் (ஆதி. 15:13-16). ஆகையால் அவர் 40 வயதானவரானபோது ஒடுக்கப்பட்ட இஸ்ரயேலர்களுக்கு ஆதரவாளராக நிற்க நாடினார். ஆனால் அப்போது மோசே தன் சொந்த பெலத்தில் சென்றதால் தோல்வியடைந்தார் (யாத். 2:11-15). அதற்குப்பிறகு 40 வருடங்களுக்கு அவர் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. அந்த காத்திருத்தலின் காலத்தில் அவர் பெற்ற அனுபவங்கள், அவர் ஒன்றுமில்லை என்பதை அவருக்குக் கற்பித்தன. இறுதியாகக் கர்த்தர் அவரைக் கனப்படுத்தின போது அவர் பூமியிலுள்ள சகல மனிதர்களிலும் மிகுந்த சாந்த குணமுடையவராக (பணிவுநயமுள்ளவராக) இருந்தார் (எண். 12:3). அவருடைய நீண்ட கால காத்திருத்தல் விருதாவாகவில்லை - அவர் வல்லமை மிக்க விடுதலையாளரானார்.

*5.* தாவீது இஸ்ரயேலின் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தும் சவுலை கொலை செய்ய முற்படவில்லை. அவருக்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்தும் கூட, கர்த்தர் அபிஷேகம் பண்ணினவர் மேல் கையை நீட்ட மனதில்லாதிருந்தார். சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பதற்கு, தேவனுக்குக் குறித்த ஏற்ற காலத்திற்காகக் காத்திருந்தார் (1சாமு. 26:23). பல வருடங்களுக்கு முன்பு சீலோவில் இஸ்ரயேலர்கள் அடைந்த தோல்வியில் பிடிக்கப்பட்ட பரிசுத்த பெட்டியைத் தாவீது திரும்பக் கொண்டு வந்தார். தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதனாயிருந்தார்.

*6.* இவ்விதமான முன்மாதிரிகளும் மற்ற பல முன்மாதிரிகளும் நமக்கிருக்கும்போது, தேவன் கிருபையாய் நமக்குச் செய்திருக்கிற வாக்குத்தத்தங்களின் நிச்சயமான நிறைவேறுதலுக்காக நாமும் முழுமனதோடும் காத்திருக்க வேண்டும். அதே நேரத்தில், தாங்கள் காத்திருக்க வேண்டுமென்று அறிந்திருந்தும், தேவனுக்காகவும் அவருடைய ஏற்பாடுகளுக்காகவும் காத்திருக்க மறுத்தவர்களுக்கு நேரிட்ட கொடிய பேரிடர்களையும் மறந்துவிடாதிருப்போமாக.

## காத்திராதிருப்பதற்கு அளிக்கப்பட்ட தண்டனைகள்

*7.* இஸ்ரயேல் தேசத்தின் நியாயப்பிரமாணிக்கர் மலையிலிருந்து திரும்ப வருவதற்குக் காத்திருக்க அவர்கள் மறுத்தார்கள். "எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்" என்று அவர்கள் சொன்னார்கள் (யாத். 32:1). அவர்களுடைய பொறுமையின்மையினால் பொன் கன்றுக்குட்டியை உருவாக்கி கர்த்தரை விட்டுவிட்டார்கள். இதற்காக அவர்களை அழிக்கப் போவதாகத் தேவன் அவர்களை எச்சரித்தார். எகிப்திலிருந்து வெளியேறினபோது இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக இருந்தவர்களில், இரண்டு பேர்கள் மட்டுமே, அதற்கு 40 வருடங்களுக்குப் பிறகு யோர்தானை கடந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் (எண். 14:26-38).

*8.* சவுல் ராஜா சாமுயேல் திரும்ப வருவதற்குக் காத்திருக்க மறுத்தார். கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக பலியை செலுத்தினார். அதின் விளைவாக சவுலின் வீட்டார் இஸ்ரயேலில் தொடர்ந்து ராஜ்யபாரம் பண்ண அனுமதிக்கப்படாதிருந்தார்கள் (1சாமு. 13:8-14).

*9.* சுவிசேஷ யுக சபை என்று அழைக்கப்பட்டிருந்த வகுப்பார், கிறிஸ்து திரும்ப வருவதற்குக் காத்திருக்க மறுத்து, போலி கிறிஸ்தவ ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். அதின் விளைவாக, இருண்ட யுகங்களென்று எல்லோரும் அழைக்கிற கொடிய காலத்தில் "பாழாக்கும் அருவருப்பு" உருவானது. ஆரம்ப காலத்தில் வழி விலகிப்போன சபையை "வேசி" என்றும், பிற்காலத்தில் வழி விலகிப்போன புரட்டஸ்டண்ட் மதப் பிரிவுகளை அவளுடைய "குமாரத்திகள்" என்றும் தேவன் அழைக்கிறார்.

*10.* இவைகள் எல்லாவற்றிலும் நாம் காத்திருத்தலின் முக்கியத்துவத்தைக் காண்கிறோம். நமக்கு இரங்கும்படி தேவன் தாமே காத்திருக்கிறார் (ஏசா. 30:18). தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிற படி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2பேது. 3:9). கர்த்தராகிய யெஷுஆவின் சத்துருக்களை தேவன் அவருடைய பாதபடியாக்கி போடும் வரைக்கும், கர்த்தராகிய யெஷுஆவும் கூட தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து பொறுமையோடு காத்திருந்தார் (சங். 110:1). உலகத்தோற்ற முதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது (அப்.15:18). கர்த்தர் நீதி செய்கிற தேவனாக இருப்பதால், அவர் அவருடைய திட்டத்தின் எந்த ஒரு பகுதியையும் கூட மாற்றுவதில்லை. அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள் (ஏசா. 30:18).

## தேவனுக்கேற்ற காலத்திற்காகச் சகலமும் காத்திருக்கிறது

*11.* எகிப்திலுள்ள மகா பிரமீடும் கூட சத்தியத்திற்கு இணக்கமாக அதின் அற்புதமான சான்றைக் கொடுப்பதற்கு 4000 வருடங்களுக்கு மேலாகக் காத்திருந்தது. இந்த நீண்ட காலம் முழுவதும் அதின் நோக்கம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. அது ஒரு பழைய கல்லறையாக மட்டுமே கருதப்பட்டது. ஆனால் உண்மையில் அது ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிடுகிற தேவனுடைய "சாட்சியின் ஸ்தம்பமாக" இருக்கிறது (ஏசா. 19:19,20).

*12.* தேவ ஆவியின் அகத்தூண்டுதலினால் எழுதப்பட்ட வார்த்தையும் கூட, ஜீவனுள்ள வார்த்தையானவர் வந்து அந்த வார்த்தையின் அதிசயமான சத்தியங்களை அவருடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஜனங்களுக்குப் பரிமாறும் வரை காத்திருந்தது. "முடிவு காலம் மட்டும்" தானியேலின் தீர்க்கதரிசனங்களின் "வார்த்தைகளைப் புதைப்பொருளாக வைத்து வைத்து, இந்த புத்தகத்தை முத்திரை போட" அவருக்குச்

சொல்லப்பட்டது. ஏனென்றால் அறிவு பெருகிப்போய் அநேகர் அங்கும் இங்கும் ஓடும் வரை ஒருவனும் அந்த தீர்க்கதரிசனங்களின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள கூடாததாயிருந்தது (தானி. 12:4,9). தானியேலின் எழுத்துக்கள் அவைகளுடைய சாட்சியைக் கொடுப்பதற்காகக் கிட்டத்தட்ட 2500 வருடங்கள் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. "இரண்டு சாட்சிகளாகிய" முழு பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் 1260 உருவகமான நாட்கள் (வருடங்கள்) முடிவடையும் வரை "இரட்டு வஸ்திரம் (நடைமுறையில் இல்லாத "மரித்துபோன" பாஷைகள்) உடுத்திக் கொண்டு" காத்திருக்க வேண்டியதாயிருந்தது. இந்த 1260 உருவகமான நாட்களின் முடிவானது, தானியேல் தீர்க்கதரிசி சொன்ன "முடிவு காலத்தின்" துவக்கமாக இருந்தது (தானி. 8:19; வெளி. 11:3). அப்போது அந்த இரண்டு சாட்சிகள் "ஜீவனடைந்து" வானத்திற்கு ஏறிப் போயிற்று (வானப்பரியந்தம் உயர்த்தப்பட்டன – வெளி. 11:12). 1799க்குப் பிறகு பைபிள் சொசைட்டிகள் உடனே உருவாயிற்று. இந்த சொசைட்டிகளினால் வேதாகமங்களின் எண்ணிக்கை இலட்சக் கணக்கில் பெருகி, தேவனுடைய சாட்சிகளுக்குப் புது ஜீவனைக் கொடுத்தது.

*13.* பண்டைய காலங்களின் புதைப்பொருள்களும் கூட, வேதாகம சத்தியத்திற்கு இசைவிணக்கமாக அவைகளுடைய கூடுதலான சாட்சியைக் கொடுப்பதற்காகச், சமீப காலத்தில் அவைகள் கண்டுபிடிக்கப்படும் வரை பூமியின் தூளிலே காத்துக்கொண்டிருந்தன (பாபிலோன், எகிப்து போன்ற நாடுகள்). தொல்பொருள் ஆராய்ச்சியின் இந்த சான்றுகள் கண்டுபிடிக்கப்படும் வரை, கல்விமான்கள் தேவ வார்த்தையின் பல சரித்திர ரீதியான நிகழ்வுகளின் உண்மையைக் குறித்துச் சந்தேகப் பட்டுக் கொண்டிருந்தார்கள். தேவனுடைய பிள்ளையானவனோ கர்த்தருடைய வார்த்தையை விசுவாசத்துடன் ஏற்றுக் கொள்கிறான். சந்தேக மனப்பான்மையினால் எழும்புகிற தப்பறைகளிலிருந்து இது அவனை பாதுகாக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சியின் இந்த சான்றுகள் தேவனுடைய பிள்ளைகளின் விசுவாசம் உண்மையானதென்று மெய்ப்பித்துக் காட்டுகிறது.

## யாக்கோபின் குமாரனாகிய தாண் சம்பந்தமாக யாக்கோபு இரட்சிப்புக்காகக் காத்திருப்பது

*14.* யூத தேசத்தை ஸ்தாபித்தவராகிய யாக்கோபு தேவனுடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறதாக அறிவித்தார். மேலும் அவருடைய குமாரர்களில் ஒருவராகிய தாண் என்பவரைக் குறித்து சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளோடு இந்த நம்பிக்கையை இணைக்கிறார் என்பது புதுமையாயிருக்கிறது. முற்பிதாக்களில் பலர் தீர்க்கதரிசிகளாக இருந்தார்கள் என்று நாம் அறிகிறோம் (ஆதி. 49:1). ஆனால் அவைகளுடைய ஆழமான அர்த்தங்களை ஆராய்ந்து புரிந்து கொள்வதற்கு முன், அவைகள் தேவனால் மேலும் விளக்கப்படுவதற்குக் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. தாணை குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்திற்கு இது இன்னும் விசேஷமாகப் பொருந்தும். ஆதி. 49:16-18 வரையுள்ள வசனங்களில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம் : "தாண் இஸ்ரயேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரமாகி, தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான். தாண், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப்போலவும், பாதையில் இருக்கிற விரியனைப்போலவும் இருப்பான். கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்."

## தாண் கோத்திரம் விக்கிரகாராதனைக்குள் சென்ற கோத்திரமாக இருந்தது

*15.* ஆதி. 49:16-18 வரையுள்ள வசனங்களில் சொல்லப்பட்ட மறைபொருளைப் புரிந்து கொள்வதற்கு நாம் தாண் கோத்திரத்தின் சரித்திரத்தை ஆராய வேண்டும். மேலும் இரட்சிப்பின் திட்டத்தைப் பொதுவாகப் புரிந்து கொள்ளவும் வேண்டும். நியா. 18-ம் அதிகாரத்தில், தாண் கோத்திரமானது யாவே தேவனைத் தொழுது கொள்வதிலிருந்து வழிவிலகி, வெளிப்படையாக விக்கிரகாராதனை செய்தது என்று நாம் காண்கிறோம். இந்த காரணத்திற்காகவே, ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையை நெற்றியில் பெற்ற இஸ்ரயேலின் எல்லா கோத்திரத்தாரையும் சேர்ந்த 144000 பேர்கள் பாராட்டப்பட்டு குறிப்பிடப்பட்ட போது, தாண் கோத்திரம் விட்டு விடப்பட்டது (வெளி. 7:1-8 - இங்கே தாணுக்குப் பதிலாக யோசேப்பின் முதல் பிள்ளையாகிய மனாசே குறிப்பிடப்பட்டிருக்கிறார்.

*16.* இந்த கோத்திரம் இவ்வாறு வழி விலகி போனதைப் பற்றிய சான்றுகள் எல்லாம், துவக்கத்திலிருந்தே அதின் உண்மைத்துவமில்லாத பண்பைக் காண்பிக்கின்றன. அதின் ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசமில்லாதவர்களாக இருந்ததால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியைச் சுதந்தரித்துக் கொள்ளத் தவறினார்கள். அவர்களுடைய சொந்த பலத்தில் அல்லாமல் தேவனுடைய பலத்தில் அவர்கள் தங்கள் சத்துருக்களை மேற்கொண்டு, தேசத்தில் அவர்களுக்குரிய பங்கைச் சுதந்தரித்துக் கொண்டிருக்கக்கூடும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாததால், அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை விட பலசாலிகளாக இருந்தார்கள். அவர்கள் மலைகளில் குடியிருக்கக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். பின்பு அவர்கள் அவர்களுடைய சுதந்தரத்தை விட்டு விட்டு, வடக்கே உள்ள இடத்திற்குச் சென்று குடியிருந்தார்கள். அவ்விடத்து ஜனங்கள் போர் செய்யத் திறமையற்றவர்களாயிருந்தார்கள். தாண் கோத்திரத்தார் அவர்களை எளிதாக மேற்கொண்டார்கள். அவர்கள் லாயீஸ் என்ற இடத்தை அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டு அதைத் தங்கள் சொந்த நகரமாக ஆக்கிக் கொண்டார்கள். அவர்கள் அந்த பட்டணத்திற்குத் தாண் என்று பெயரிட்டார்கள். தாண் பட்டணமானது இஸ்ரயேலின் எல்லா பட்டணங்களைக் காட்டிலும் வடக்கு திசையிலிருந்தது. பெயர்செபாவோ மிகவும் தெற்கிலிருந்தது. ஆகையால் பாலஸ்தீனா தேசம் முழுவதையும் குறிப்பிடுவதற்கு "தாண் முதல் பெயர்செபா மட்டும்" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது (நியா. 20:1).

*17.* தேசத்தில் அவர்களுக்குரிய பகுதியைச் சுதந்தரித்துக் கொள்ளாமலும், தங்களுக்கென்று ஒரு சுதந்தரத்தைத் தேடிக் கொள்வதற்குப் பதிலாக இடது கைக்கும் வலது கைக்கும் வித்தியாசம் அறியாத ஜனங்களை மேற்கொள்வதற்கும் கூடுதலாக, தாண் கோத்திரத்தார் வடக்கு திசையை நோக்கி செய்த பிரயாணத்தில் ஒரு தனி மனிதனுடைய ஆசாரியனையும் அவனுடைய விக்கிரகங்களையும் வலுக்கட்டாயமாகப் பற்றிக் கொண்டு, தங்களுடைய நகரத்தில் விக்கிரகாராதனையை ஸ்தாபித்

துக் கொண்டார்கள். சிறையிருப்பின் காலம் வரை காரியங்கள் இவ்வாறே இருந்தது என்று வேத வசனங்கள் தெரிவிக்கின்றன *(நியா. 18:29-31).*

*18.* சாலொமோனின் மரணத்திற்குப் பிறகு இஸ்ரயேலின் கோத்திரங்கள் இரு ராஜ்யங்களாகப் பிரிக் கப்பட்ட போது, பத்து கோத்திரங்களின் ராஜாவாகிய யெரொபெயாம், ஜனங்கள் கர்த்தரைத் தொழுது கொள்வதற்கு எருசலேமிற்குச் செல்வதைத் தடுப்பதற் குப் பொன்னினால் இரு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி ஒன்றைப் பெத்தேலிலும் *(எருசலேமிற்குச் சற்று வடக்கே)* ஒன்றை தாணிலும் ஸ்தாபித்தான். யெரொபெயாம் தன்னுடைய பிரஜைகளிடம் இவ்வாறு சொன்னான்: "நீங்கள் எருசலேமிற்குப் போவதற்கு உங்க ளுக்கு வருத்தம்; இஸ்ரயேலர்களே, இதோ, இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள்". எகிப்திலிருந்து இஸ்ரயேலர்கள் வெளி யேறின போது வனாந்தரத்தில் விசுவாசமில்லாமல் செய்யப்பட்ட அவனுடைய மூதாதையரைப் போல் அவனும் செய்தான் "இந்தக் காரியம் பாவமாயிற்று; ஜனங்கள் இந்த ஒரு கன்றுக்குட்டிக்காகத் தாண்மட்டும் போவார்கள்" *(1 ராஜா 12: 26-30).* விக்கிரகாராதனை ஸ்தா பிப்பதற்குத் தாண் மிகவும் ஏற்ற இடமாக இருப்பதை யெரொபெயாம் கண்டான் என்பதில் வெளிப்படை யாயிருக்கிறது.

*19.* விக்கிரகாராதனையில் ஈடுபட்டு தாண் கோத்திரம் ஸ்தாபித்த இந்த பட்டணம், இஸ்ரயேலில் புறஜாதி தேவர்களைத் தொழுது கொள்ளும் முக்கிய இடமாகப் பெயர் பெற்றது. தாண் கோத்திரத்தார் ஆரம்பத்தில் திருடிக் கொண்டு வந்த சொரூபங்கள், புறஜாதி தேவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தின *(பாகால்கள் - Baalim).* அதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவ்விடத்தில் யெரொபெயாம் ஸ்தாபித்த பொன் கன்றுக்குட்டியானது, எகிப்தியர்களின் கடவுளாகிய ஓசிரிசை *(Osiris)* பிரதிநிதித்துவப்படுத்தினது. பிற்காலத் தில் கிரேக்கர்களும் அவர்களுடைய கடவுளாகிய பான் *(Pan)* என்பவனையும் அவ்விடத்திலே தொழுது கொண் டார்கள். கிரேக்கர்கள் பிற்காலத்தில் தாண் பட்டணத் திற்குப் பனெயாஸ் *(Paneas)* என்று பெயரிட்டார்கள். ரோமர்கள் அதைப் பிலிப்பு செசரியா *(Caesarea Philippi)* என்று அழைத்தார்கள் (அவ்விடத்து காற்பங்கு தேசாதி பதியாகிய பிலிப்பின் பெயரின் படி). இந்தப் பட்டணம் யோர்தான் துவங்கும் இடத்தில் இருக்கிறது. வேதாகம வரைப்படங்களில் நாம் இதைக் காணலாம்.

*20.* வழி விலகிப் போய் விக்கிரகாராதனையைத் தொடங்கி வைத்த நிம்ரோதே, பான், ஓசிரிஸ் மற்றும் மற்றெல்லா புறமத தேவர்களுக்கும் காரணராக இருந் தான் என்றும், இந்த தேவர்கள் எல்லாம் மரித்துக் கொண்டிருக்கிற உலகத்தாரின் இரட்சகர்களாகக் *(போலி மேசியாக்களாக)* கருதப்பட்டார்கள் என்றும் நாம் உணரும்போது, பொய்யான மேசியாக்களுக்குப் பெயர் பெற்ற இந்த இடத்தில் கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்து தமது சீஷர்களிடம் கேட்ட கேள்வியின் முழு முக்கியத் துவத்தை நாம் இன்னும் சிறப்பாகப் புரிந்து கொள்ளக் கூடும். தாண் கோத்திரம் மற்றும் பனெயாஸ் எனப்பட்ட பண்டைய கால பட்டணமாகிய பிலிப்பு செசரியா விலிருந்த போது தான், "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யாரென்று சொல்லுகிறார்கள்?" என்ற கேள்வியை யெஷுஆ கேட்டார். அதற்குப்பிறகு தமது சீஷர்களிடம், "நீங்கள் என்னை யாரென்று சொல்லு கிறீர்கள்?" என்று நேரடியாகக் கேட்டார். "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு சொன்ன பதிலைக் கேட்டபோது யெஷுஆ என்னே மகிழ்ச்சி அடைந்தார்! ஏனென்றால் தேவ ஆவியின் அகத் தூண்டுதலில்லாமல் யெஷுஆவை மேசியாவாக அடை யாளம் காண ஒருவனாலும் கூடாது என்று யெஷுஆ அறிந்திருந்தார் *(மத். 16:13-17).* போலி மேசியாக்களின் அரணாக இருந்த இவ்விடத்திலே, யெஷுஆ அவருடைய சீஷர்களின் விசுவாசத்தையும் ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலையும் பரீட்சித்தார். மரண அழிவுக்குட்பட்ட மனுகுலத்தின் உண்மையான இரட்சகராக அவர்கள் அவரை அடையாளம் காணக் கூடுமா என்று அவர் அவர்களைப் பரீட்சித்தார்! மாம்சமும் ரத்தமும் இந்த மேன்மையான சத்தியத்தை உனக்கு வெளிப்படுத்த வில்லை. பரம பிதா மட்டுமே இதை உனக்கு வெளிப் படுத்தினார் என்று யெஷுஆ உடனடியாகக் கூறினார். யெஷுஆ என்னே களிகூர்ந்தார்!

*21.* யெரொபெயாமால் ஸ்தாபிக்கப்பட்ட மற் றொரு விக்கிரகம் பெத்தேலில் இருந்தது. அது எப்பிராயீமின் கோத்திரத்தாருக்குக் கிடைத்த இடத் திலிருந்தது. ஒரு கண்ணோட்டத்திலிருந்து தாண் பட்டணம் எப்பிராயீமிலும் இருந்ததென்று சொல்வது சரியானதாகும். ஏனென்றால் எப்பிராயீமின் எல்லா கோத்திரங்களிலும் பெரிய கோத்திரமாக இருப்பதால் பத்து கோத்திரங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக அழைப் பதற்கு எப்பிராயீம் என்ற பெயர் பலமுறை உபயோகிக் கப்பட்டது. எப்பிராயீமின் கோத்திரத்திற்குக் கிடைத்த இடம் சமாரியா என்றும் அழைக்கப்பட்டதால் *(1 ராஜா. 13:32).* சமாரியா, எப்பிராயீம் மற்றும் இஸ்ரயேல் என்ற பெயர்கள் பத்து கோத்திரங்களைக் குறிப்பிட மாற்றி மாற்றி உபயோகிக்கப்பட்டன *(ஓசி. 7:1).* எப்பிராயீம் அல்லது சமாரியா என்பது பல நேரங்களில் சுவிசேஷ யுகத்தின் பொய்யான சபையை குறிக்க உபயோகிக் கப்படுகிறது.*(ஓசி. 4:17; 8:5,6)*

## தாண் - யூதாஸ்– சாத்தான்

*22.* தேவனுடைய அடையாளமான ஜனங் களாகிய இஸ்ரயேலர்கள் சம்மந்தப்பட்ட காரியங்க ளெல்லாம், சுவிசேஷ மற்றும் மில்லினிய யுகங்களின் நிஜநிறைவேறுதலான உண்மைகளை அடையாளப்படுத் துவதற்குக், கர்த்தரால் கையாளப்பட்டிருந்தது என்பதை நாம் அறிகிறோம். இவ்வாறு வழி விலகிப் போன தாண் கோத்திரத்தாரும், சுவிசேஷ யுகத்தில் கர்த்தரை விட்டு விட்டு, தங்களின் இருதயங்களில் விக்கிரகங்களை ஸ்தா பித்துக் கொண்ட விசுவாச உண்மைத்துவமில்லாமல் துரோகம் செய்த ஒரு வகுப்பாரை அடையாளப் படுத்துகிறார்கள். யூதாஸ்காரியோத் இந்த வகுப்பாரின் முன்னோடியாக இருந்தான். யூதாஸோ, பெரிய எதிராளி யும் கர்த்தருக்குத் துரோகம் செய்தவனுமாகிய சாத்தா னின் கையில் ஒரு கருவியாக இருந்தான். சாத்தானே உண்மையான தாண் கோத்திரத்தானாக, "வழியில் கிடக் கிற சர்ப்பமாக" இருக்கிறான் *(யோவா. 13:26,27; ஆதி. 49:16,17-ம்* வசனங்களைப் பார்க்கவும்). தாண் கோத்திரத் தாரும் அவர்களுக்கு முதலில் கிடைத்த சுதந்தரத்தை விட்டுவிட்டு, வடக்கு திசையிலுள்ள சுதந்தரத்தை அப கரித்துக் கொண்டதைப் போலவே, சாத்தானும் தன்னை உயர்த்தி "வடபுறங்களிலுள்ள ... பர்வதத்திலே வீற்றிருப் பேன்" என்றும் "உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்றும் தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டான் *(ஏசா. 14:13,14).*

*23.* வேதாகம அடையாளங்களில் நான்கு திசைகளும் சில குறிப்பிடப்பட்ட நிலைகளை அடையாளப் படுத்த உபயோகிக்கப்படுகின்றன. *"கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையிலுமிருந்து (தெற்கு) ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்" (சங். 75: 6,7).* என்று நாம் வாசிக்கிறோம். தேவனும் வல்லமையின் இருப்பிடமும் வட திசையிலிருப்பதாக நாம் இதிலிருந்து புரிந்து கொள்கிறோம். சாத்தான் வல்லமையின் செங்கோலை கையாள கூடியவனாக இருப்பதற்கு, வடபுறத்திலுள்ள பர்வதத்தில் வீற்றிருந்து உன்னதமானவருக்கு ஒப்பாவதற்குப் பேராசை கொண்டான்.

*24.* மகா பிரமீடு கட்டப்பட்ட காலத்திலும் கூட *(இந்த கட்டிடம் யுகங்களை பற்றிய தேவ ஏற்பாட்டுக்குச் சான்றளிக்கிறது) "வலுசர்ப்பம்"* என்ற பெயர் கொண்ட நட்சத்திர கூட்டத்தின் *(Dragon Constellation)* பிரதான நட்சத்திரமாகிய ஆல்பா டிராக்கொனிஸ் *(Alpha Draconis)* துருவ நட்சத்திரமாக *(North Star)* இருந்தது. புராணக் கதைகளின் படி அது சாத்தானை அடையாளப் படுத்தினது. மகா பிரமீடு கட்டப்பட்ட காலத்தில் இந்த நட்சத்திரம் கீழ்நோக்கி செல்லும் பாதையை நேரடியாகப் பிரகாசிப்பித்தது. இந்த கீழ் நோக்கி செல்லும் பாதை *"இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகத்தை" (கலா.1:4)* அடையாளப்படுத்துகிறது என்றும், வேதாகமத்தில் சாத்தான் "இவ்வுலகத்தின் தேவன்" என்று *(2கொரி. 4:4)* அழைக்கப்படுகிறான் என்றும் நாம் நினைவு கூரும்போது, இந்த அமைப்பு எவ்வளவு அர்த்தம் நிறைந்ததாக இருக்கிறது என்று நாம் காண்கிறோம். இவ்விதமான இசைவுகள் தற்செயலாக நிகழ்ந்தவைகளாக இருக்க முடியாது. தேவன் தம்முடைய ஜனங்களின் விசுவாசத்தைப் பலப் படுத்துவதற்காகவே மேற்பார்வையிட்டு இவைகளைத் தெளிவாக அமைத்தார் என்று நாம் காண்கிறோம். "வலுசர்ப்பமும்", "பழைய பாம்புமாகிய" சாத்தான் *(வெளி.12:9)* மரித்துக் கொண்டிருக்கிற உலகத்தின் தேவனாயிருக்கிறான். கர்த்தர் அமைத்த "கல் சாட்சி" இந்த உண்மையைத் தெளிவாகச் சித்தரிக்கிறது. செங்குத்தான கோணத்தில் கீழ் நோக்கி செல்கிற பாதையானது, அழிவை அடையாளப்படுத்தும் குழி அல்லது தரைக்குக் கீழுள்ள அறையில் முடிவடையும். இந்த கீழ் நோக்கி செல்கிற பாதைக்குள் வலுசர்ப்ப நட்சத்திரம் பிரகாசிப்பதின் மூலம் சாத்தான் இவ்வுலகத்தின் தேவனாக இருக்கிறான் என்பது சித்தரிக்கப்படுகிறது.

## யாவே தேவனுடைய மேன்மையான "குதிரையும்" "குதிரையின் மேல் ஏறி இருக்கிறவனும்"

*25.* உருவகமான வார்த்தைகளில் "குதிரை" என்பது ஒரு குறிப்பிட்ட பாதையில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிற சீரான ஒரு திட்டத்தை அல்லது ஏற்பாட்டைக் குறிக்கிறது. இரட்சிப்பின் திட்டமே கர்த்தருடைய "குதிரை"யாக இருக்கிறது. அந்த குதிரையின் மேல் ஏறுகிறவர் யெஷுஆவாக இருக்கிறார். ஏசா. *31:3*-ம் வசனத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்: *"எகிப்தியர் தெய்வமல்ல, மனுஷர் தானே; அவர்களுடைய குதிரைகள் ஆவியல்ல, மாம்சம் தானே"*, வேறு வார்த்தைகளில் சொன்னால் உலகத்தின் திட்டங்கள், கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகள் தேவ ஆவியினால் உண்டானவைகள் அல்ல. இவ்விதமான "குதிரைகளைச்" சார்ந்திருக்கிறவர்களுக்கு ஐயோ! *(ஏசா. 31:1).* பெரிய யூதாசும் தாண் கோத்திரத்தானுமாகிய சாத்தான், வழியில் கிடந்து கர்த்தருடைய குதிரையின் குதிகாலை வஞ்சகமாகக் கடித்ததால், குதிரையின் மேல் இருக்கிறவராகிய யெஷுஆ மல்லாந்து விழுந்து மரித்தபோது *(ஆதி. 49:17)*, சாத்தான் தேவனுடைய திட்டத்தைக் குலைத்துப் போட்டான் என்றும் ஜீவாதிபதியை நித்தியத்திற்கும் கொன்று போட்டான் என்றும் எண்ணினான்.

*26.* ஆனால் உண்மையான இஸ்ரயேலர்கள் அனைவரின் பிரதிநிதியாகிய யாக்கோபு தீர்க்கதரிசனமாக அறிவிக்கிறதாவது, *"கர்த்தாவே உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்" (ஆதி. 49:18).* சாத்தானுக்கு உகந்த யூதாஸின் இருதயத்திற்குள் அவன் நுழைந்து கர்த்தரைக் காட்டிக் கொடுக்கும்படி செய்தபோது, தான் திறமையாகச் செயல்பட்டதாகச் சாத்தான் எண்ணினாலும், அது உண்மையில் அவனுக்கே அழிவை உண்டாக்கின செயலாக இருந்தது. ஏனென்றால் *"மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு"* மரணத்தை ருசி பார்ப்பதற்காகவே யெஷுஆ மாம்சமானார் *(எபி. 2:9,14).* யெஷுஆவின் மரணமானது உலகத்திற்கு இரட்சிப்பையும், சாத்தானுக்கு அழிவையும் அர்த்தப்படுத்துகிறது.

## தாண் கோத்திரத்தைப் பற்றிய கூடுதலான வெளிச்சம்

*27.* இஸ்ரயேலின் கோத்திரங்களுக்குக் கடைசி நாட்களில் என்ன நேரிடுமென்று அந்த கோத்திரங்களை ஸ்தாபித்தவராகிய யாக்கோபு முன்னறிவித்ததைப் போலவே, அந்த கோத்திரங்களின் நியாயப்பிரமாணிக் கராகிய மோசேயும் ஒவ்வொரு கோத்திரத்தைப் பற்றிய கூடுதலான தீர்க்கதரிசனங்களை முன்னுரைத்தார். தாண் கோத்திரத்தைக் குறித்து மோசே சொன்ன தீர்க்கதரிசனத்திலிருந்து, தேவனுடைய திட்டத்தில் அந்த கோத்திரத்துக்கு இருந்த அடையாளமான பங்கைப் பற்றிய கூடுதலான விவரங்களைப் பெற்றுக் கொள்கிறோம். *"தாணைக் குறித்து: தாண் ஒரு பாலசிங்கம், அவன் பாசானிலிருந்து பாய்வான்"* என்று அவர் சொல்லி இருக்கிறார் *(உபா. 33:22).*

*28.* பாலஸ்தீனா தேசத்தின் வரைபடத்தைப் பார்க்கும்போது, பாசான் என்பது யோர்தானுக்குக் கிழக்கே, வடக்கு திசையுள்ள மலைகள் நிறைந்த ஒரு இடமாக இருந்ததென்று நாம் காண்கிறோம். தாண் பட்டணமானது அவ்விடத்தின் வடக்கு மேற்கில் இருந்தது. பாசானும், விக்கிரகாராதனையில் ஈடுபட்ட தாண் கோத்திரமும் ஒத்தவைகளாகக் கருதப்பட்டிருந்தன. இஸ்ரயேல் தேசமும், அதைச் சுற்றியுள்ள தேசங்களும் தேவனுடைய இரட்சிப்பின் மகிமையான திட்டத்தின் பல்வேறு அம்சங்களை அடையாளப்படுத்தி விளக்கும் படிக்குத் தேவன் அவைகளை ஏற்படுத்துவது மட்டுமல்ல, பாலஸ்தீனா நாட்டிலும் அதைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொரு மலையையும், பள்ளத்தாக்கையும், சமுத்திரத்தையும், ஆற்றையும், சமவெளியையும், பாலைவனத்தையும், பட்டணத்தையும், மிருகத்தையும், மரத்தையும், தாவரத்தையும் அந்த அதிசயமான திட்டத்தின் ஏதேனுமொரு விவரத்தை உருவகப்படுத்த அல்லது அடையாளப்படுத்த உபயோகித்தார்.

*29.* பாசான் பர்வதமென்பது தாண் கோத்திரத்தின் அல்லது யூதாஸ் வகுப்பாரின் அரணாகிய அந்தி

கிறிஸ்துவின் ராஜ்யத்தை அடையாளப்படுத்துகிறது. இந்த கருத்தை சங். *68:15,16*-ம் வசனங்கள் நமக்கு இன்னும் தெளிவாக்குகின்றன. தமிழ் வேதாகமத்தில் *(KJV*யிலும் கூட) அதை நாம் இவ்வாறு வாசிக்கிறோம்: "தேவபர்வதம் பாசான் பர்வதம் போலிருக்கிறது; பாசான் பர்வதம் உயர்ந்த சிகரங்களுள்ளது. உயர்ந்த சிகரமுள்ள பர்வதங்களே, ஏன் துள்ளுகிறீர்கள்; இந்தப் பர்வதத்தில் வாசமாயிருக்கத் தேவன் விரும்பினார்; ஆம், கர்த்தர் இதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்."

## பாசான் பர்வதமும் சீயோன் பர்வதமும்

*30.* தேவன் உருவகமாக வாசம் பண்ண விரும்பு கிற பர்வதம் சீயோன் பர்வதமாக இருக்கிறதென்று வேதாகம மாணாக்கர்கள் அனைவரும் அறிவார்கள் *(சங்.132:13,14)*: "கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார். இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம் பண்ணுவேன்."

*31.* சங்கீதக்காரர் சங். *68:15,16*-ம் வசனங்களில் பாசானை சீயோனோடு வித்தியாசப்படுத்துகிறார் என்பது தெளிவாயிருக்கிறது. லீசர் *(Leeser)* மற்றும் வேரியோரம் *(Variorum)* மொழிபெயர்ப்புகளில் இது இன்னும் தெளி வாக இருக்கிறது. இவ்வசனங்கள் இவ்வாறு மொழி பெயர்க்கப்படக் கூடும்: "தேவபர்வதம் பாசான் பர்வதம் [ஆகுமா]? [இல்லை]. பாசான் பர்வதம் பல சிகரங் களுள்ளது. பல சிகரமுள்ள பர்வதமே, ஏன் பொறாமைக்கொள்கிறாய்?; இந்தப் பர்வதத்தில் [இந்த சிறிய, தன்னடக்கமுள்ள சீயோன் பர்வதத்தில்] வாசமா யிருக்கத் தேவன் விரும்பினார்; ஆம், கர்த்தர் இதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்." *"The hill of God [is it] the hill of Bashan? [No.] A hill of many peaks is the hill of Bashan. Why are ye so envious, ye hill of many peaks? This [small, unpretentious hill of Zion] is the hill which God desireth to dwell in; yea, the Lord will dwell in it forever."*

*32.* சுவிசேஷ யுகத்தில் பெரிய அந்திகிறிஸ்து வின் ஸ்தாபனமானது தன்னைத் தேவனுடைய ராஜ்ய மென்று மகிழ்ச்சியுடன் அழைத்துக் கொண்டது. உயர்ந்த தாகவும் பல சிகரங்களை உடையதாகவும் இருந்த பாசான் பர்வதம் சிறிய சீயோன் பர்வதத்தை இழிவானதாகக் கருதி, கர்த்தரிடமிருந்து சீயோன் பர்வதம் பெற்றுக் கொண்ட தயவைக் கண்டு பொறாமை கொண்டதைப் போலவே, பூமியின் பெரியவர்கள் அனைவரையும் (பல "சிகரங்கள்") கொண்ட பெருமையுள்ள அந்திகிறிஸ்து ஸ்தாபனமானது, எந்த வகுப்பாருக்குப் பரம பிதா ராஜ்யத்தை கொடுக்க பிரியமாயிருந்தாரோ, அந்த சிறிய சீயோன் வகுப்பாரை, "சிறுமந்தையை" இழிவாகக் கருதி, துன்புறுத்தும் அதே நேரத்தில், அவர்கள் மேல் பொறாமை கொண்டது.

*33.* நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவின் சீஷர் களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க பரமபிதா பிரிய மாயிருப்பதால் அவர்கள் பயப்படக் கூடாதென்று அவர் அவர்களை உற்சாகப்படுத்தின போது, எஜமானர் எப் பொழுது வருவாரென்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக அவர்கள் இருக்க வேண்டும் என்று அவர்களுக்கு ஆலோசனை கூறினார் *(லூக். 12:32,36)*. பொய்யான சபை அவ்வாறு காத்திருக்க மறுத்தது, அவர்கள் ஏற்கனவே கிறிஸ்துவின் ராஜ்யத்தை ஸ்தாபித்ததாக உரிமை பாராட்டி, இவ்வுலகத்தின் ராஜ்யங்களைக் "கிறிஸ்தவ ராஜியம்" *(Christendom)* என்றழைக்கிறார்கள். தாண் "பாசானிலிருந்து பாய்ந்ததா? " ஆம், யூதாஸின் மூலம் அது அவ்வாறு செய்தது. ஆரம்ப காலத்திலேயே அந்தி கிறிஸ்துவுக்கு யூதாஸில் ஒரு சிறிய தொடக்கம் இருந்தது *(1யோவா. 3:4)*. பசியுள்ள ஒரு சிங்கம் அதின் இரையின் மேல் பாய்வதைப் போல், யூதாஸ் நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவின் மேல் பாய்ந்தான்.

*34.* நம்முடைய கர்த்தர் யூதாஸைக் "கேட்டின் மகன்" என்றழைக்கிறார். "பாவ மனுஷனாகிய" அந்தி கிறிஸ்து அமைப்புக்கும் பவுல் அப்போஸ்தலர் அதே பெயரை உபயோகிக்கிறார் *(யோவா. 17:12; 2தெச. 2:3,7)*. சுவிசேஷ யுகம் முழுவதும் தாண் வகுப்பார் அல்லது யூதாஸ் வகுப்பார் பாசான் அமைப்பிலிருந்து கிறிஸ்து வின் சரீர அங்கத்தினர்களின் மேல் பாய்ந்து கொண்டி ருந்தார்கள்.

## பாசானின் எருதுகள்

*35.* தாவீது கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்து வையும், (இரண்டாம் நிலையில்) கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி, அவர்களைத் துன்புறுத்தின வகுப்பாரைப் "பாசானின் எருதுகள்" என்றழைக்கிறார்: "அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்து கொண்டது. பீறி கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல், என் மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்." *(சங்.22:12,13)*. பாசானின் மலை பிரதேசமானது அதின் பசுக்களுக்குப் பெயர் பெற்றதாயிருந்தது *(உபா. 32:14)*. பழைய ஏற்பாடு முழுவதும் பாசானின் எருதுகள் என்பது வெட்க மில்லாமல் பெருமையாகப் பேசி மற்றவர்களைக் கொடுமையாக ஒடுக்கினவர்களை அடையாளப்படுத்த உபயோகிக்கப்படுகிறது *(ஆமோ. 4:1)*. போப்பு மார்க்கம் ஈடற்ற உச்ச நிலையில் அதிகாரம் செலுத்தின ஆயிர வருட காலத்தில் *(கி.பி. 799-1799)*, போலி கிறிஸ்தவ சாம்ராஜ் யத்தின் தலைவர்கள், அவர்களுடைய பெருமையான தாக்கீதுகளின் மூலம், "சிறுமந்தையைக்" கொடுமையாக ஒடுக்கி அவர்களை ஐக்கியத்திலிருந்து வெளியேற் றினார்கள்.

## ராஜ்யத்திற்காக ஆவலுடன் காத்திருப்பது

*36.* "சீயோன்" வகுப்பார் ராஜ்யத்திற்காக ஆவ லாகக் காத்திருந்தார்கள். தேவன் பாசான் வகுப்பாரைப் புறக்கணித்தார். இந்த கடைசி காலத்திலும் கூட, பூமிக் குரிய ராஜ்யத்தைக் காண்பதற்கான ஆர்வமான விருப் பத்தை நம்மில் அபிவிருத்தி செய்ய நம்முடைய பரமபிதா பிரியமாயிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. நமக்கு வரும் சோதனைகள் இந்த ஆவலைப் பெருகச் செய்யக் கூடியவைகளாக இருக்கின்றன. "மானானது நீரோடை களை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக் கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால், இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று" *(சங். 42:1-3)*. இதில் சங்கீதக்காரர் சொல்லுகிற கருத்தை மதித் துணருவதற்கு, பாலஸ்தீன தேசத்தில் ஆறு அல்லது ஏழு மாதங்களுக்குத் தொடர்ந்து மழை பெய்வதில்லை



என்பதை நாம் நினைவு கூர வேண்டும். கிட்டத்தட்ட எல்லா ஆறுகளும் நீரோடைகளும் வறண்டு போகும். அந்நேரங்களில் சிறிய ஊற்றுகளும், கிணறுகளும், வெடிப்புள்ள தொட்டிகளும் தண்ணீர் கிடைக்கும் இடங்களாக இருந்தன (எரே. 2:13).

*37.* ஏதேனுமொரு இடத்தில் ஒரு நல்ல நிலையான ஊற்று இருக்கும்போது அதைச் சுற்றி ஒரு கிராமம் அமைக்கப்படும். சில நேரங்களில் அந்த ஊற்றிலிருந்து வீடுகளுக்குத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு மூடப்பட்ட வாய்கால்கள் உபயோகிக்கப்படும். அந்தக் வாய்கால்களில் காற்று சேர்வதால் அவைகள் உடைந்து போகாதபடிக்கு அந்த வாய்கால்களின் மூடிகளில் ஆங்காங்கே துளைகள் போடப்படும். சங்கீதக்காரர் இவ்விதமான வாய்காலை அர்த்தப்படுத்துகிறார் என்பதற்குச் சரியான அடிப்படை இருக்கிறது. “மான்கள் வாய்கால்களின்மேல் நின்று வாஞ்சித்துக் கதறுவது போல்” *(as the deer pants over the aqueducts)* என்று இவ்வசனம் மொழிபெயர்க்கப்பட வேண்டும். அதற்குள் தண்ணீர் இருக்கிறது என்பதை அந்த மான் அறியும். ஏனென்றால் மூடிகளில் இருக்கும், காற்றுக்காக அமைக்கப்பட்ட துளைகளிலிருந்து அந்த தண்ணீரின் சத்தத்தைக் கேட்கவும் அதின் நறுமணத்தை நுகரவும் கூடும். அந்த மிருகம் இந்த ஜீவத்தண்ணீருக்காகக் கதறுகிறது. ஆனால் தன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளக் கூடாததாயிருக்கிறது. அந்த உலர்ந்த அல்லது வறண்ட நிலத்தின் மத்தியில், மூடப்பட்ட ஒரு வாய்காலின் மேல் நிற்கையில், வேட்டையாடப்படுகிற அந்த பரிதாபமான ஜீவியின் துயரத்தை, நாம் நன்றாகப் புரிந்து கொள்ளக்கூடும்.

*38.* அதுபோலவே சுவிசேஷ யுகத்தில் உண்மையான சபை வகுப்பார் அவர்களுடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாய் இந்த பூமிக்குரிய கூடாரத்திலே தவித்துக் கொண்டிருந்தார்கள் (மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது). ஆனால் இப்பொழுதோ அவர்கள் கிறிஸ்துவுக்கு ஒப்பானவர்களாக இருந்து, அவர் இருக்கும் வண்ணமாகவே அவரைத் தரிசிக்கிறார்கள். யோபுவின் பொறுமையைக் குறித்து நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். யோபு தன்னைக் குறித்து அறிவித்ததைவிட அதிகமாகச் சபை வகுப்பாருக்காக இதை அறிவித்தார்: “மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்” (யோபு 14:14).

*39.* நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு நமக்குப் பொறுமை மிகவும் தேவையாயிருக்கிறது. பரிதாபமான உலகம் முழுவதும் “இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம்” (ஏசா. 25:8,9) என்று சத்தமிட்டுக் கூறும் போது நம்முடைய சந்தோஷம் என்னே பெரியதாயிருக்கும்!

★★★★★★★★★★★★★★★★★★★★★

# பரிசுத்த ஆவி : அதின் ஆண்டு கொள்ளும் குணநலன்கள் – பகுதி 3— நீதி

*PT# 367, July 1949, pp. 98-106*



*1.* **ப**ரிசுத்த ஆவியின் ஆண்டுகொள்ளும் குணநலன்களில் மூன்றாவது நீதியாகும் *(Justice)*. நீதி என்பது நல்லெண்ணமாகவும் *(goodwill)*, அதின் விளைவாக நாம் நியாயமாக *(right* –அவர்களுடைய உரிமையாக) மற்றவர்களுக்குச் செலுத்தக் கடன்பட்டிருக்கிற (நம்முடைய கடமைகள்) சிந்தனைகளாகவும் வார்த்தைகளாகவும் செயல்களாகவும் இருக்கிறது. நியாயமென்பதே *(Right)* அதின் அடிப்படையாகும். ஏனென்றால் நியாயப்பிரமாணம் அதின் கீழுள்ள அனைவருக்கும் கட்டளையிடுகிற மற்றும் அவர்களிடம் கோருகிற காரியமே நியாயம் *(right* - நியாயமான உரிமைகள் மற்றும் கடமைகள்) என்பதாகும். நியாயம் *(Right)* என்ற ஒரு காரியமில்லாமல் நீதி இருக்க முடியாது. மேலும் பிரமாணமில்லாமல் நியாயம் இருக்க முடியாது. ஏனென்றால் நீதி என்பது கடமை உணர்வின் வெளிப்பாடாக இருக்கிறது. மேலும் மனச்சாட்சி என்று நாம் அழைக்கிற கடமை உணர்வினால் நீதி அங்கீகரிக்கப்படுகிறது. நீதி என்பது பிரமாணத்திற்குட்பட்ட கடனாகவும், பிரமாணத்

தின் கோரிக்கையாகவும் இருக்கிறது.

*2.* ஆனால் நீதி என்பது பிரமாணம் கட்டளை யிடுகிற மற்றும் கோருகிற உரிமை *(right)* அல்லது கடமையை *(duty)* மட்டுமே அர்த்தப்படுத்தாது. அதற்கும் மேலான ஒன்றை அர்த்தப்படுத்துகிறது. ஏனென்றால் அதைக் கடமையாக மட்டுமே செலுத்தும் போது அது உணர்வற்ற, ஜீவனற்ற ஒரு காரியமாக இருக்கும். எவ்வித கனிவான உணர்வோ பற்றுதலோ இல்லாமலேயே மனுஷர் பிரமாணத்தின் கட்டளைகளுக்கும் கோரிக்கை களுக்கும் பிரதிகிரியை செய்யக்கூடும். நீதியிலும் ஒருவகையான அன்பிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளும்போது, நீதி என்பது உரிமை அல்லது கடமை என்ற உணர்வைவிட மேலானது என்று நாம் காண்போம். நீதியின் சிறப்பியல்பாயிருக்கிற அவ்விதமான அன்பே, கடமை அன்பாகும். அது நாம் நியாயத்தின்படி மற்றவர் களுக்குச் செலுத்த கடன்பட்ட அன்பாக இருக்கிறது.

## நீதியின் உட்கூறுகள்

*3.* இவ்வாறாக நீதி என்பதின் முக்கியமான அம்சங்களில் ஒன்று கடமை அன்பென்பதாகும். அன்பென்பது நல்லெண்ணமாகும். ஏனென்றால் நல் லெண்ணமில்லாமல் அன்பு வெளிப்பட முடியாது. மற்ற பல குணநலன்கள் இல்லாமலேயே அன்பு வெளிப் படக் கூடும். எடுத்துக்காட்டாக விருப்பத்துணிவுடன் கீழ்ப்படி யாத ஒரு பிள்ளையைச் சீர்த்திருத்துவதற்கு அன்பான பெற்றோர் அந்த பிள்ளையை அடிக்கும்போது, மெந்நயத் துடன் செயல்படுவதில்லை. ஆனால் அந்தப் பெற்றோர் நல்லெண்ணமுடையவராயிருக்கிறார். தீமை செய்பவர் களைச் சீர்த்திருத்துவதற்குச் சினத்துடன் அவர்களைக் கடிந்துகொள்கிற சீர்திருத்தவாதி, நீடிய சகிப்பை வெளிப் படுத்தவில்லையென்றாலும் நல்லெண்ணத்தை வெளிப் படுத்துகிறான். ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு நன்கொடை யைக் கொடுப்பதினால் அவனுக்குத் தீங்குண்டாகும் என்று அறிந்திருப்பதால், அதை அவனுக்குக் கொடுக்க உறுதியாக மறுக்கிறவன், தாராள குணத்தை வெளிப் படுத்தவில்லையென்றாலும் நல்லெண்ணத்தை வெளிப் படுத்துகிறான். நேர்மையில்லாத ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதைச் சினத்துடன் மறுக்கிறவன், அங்கீகார விருப்பத்தை வெளிப்படுத்தவில்லையென்றாலும் நல் லெண்ணத்தை வெளிப்படுத்துகிறான்.

*4.* இவ்வாறாக ஏதேனும் ஒரு குணநலன் இல்லாத பல அன்பான செயல்களை நாம் சுட்டிக் காட்டக்கூடும். ஆனால் நல்லெண்ணம் இல்லாத ஒரு அன்பான செயலை நாம் சுட்டிக்காட்ட முடியாது. ஆகை யால் ஒவ்வொரு அன்பான செயலிலும் நல்லெண்ணம் எப்போதுமே இருப்பதால், நல்லெண்ணம் என்பதே அன்பின் இருதயமாக இருக்க வேண்டும். ஆகையால் நீதியின் இருதயத்திலுள்ள அன்பின் பகுதி நல் லெண்ணமாக இருக்க வேண்டும். இவ்வாறாக நீதி என்பது கடமை அன்பாகும். அதாவது கடமை அல்லது உரிமை என்பதை நீதியானதாக ஆக்குவதற்கு, அதில் நல்லெண்ணம் இருக்க வேண்டும். ஆகையால் கடமை யுடன் நல்லெண்ணம் இணைக்கப்படாவிட்டால் நீதி யில்லை.

*5.* இவ்வாறாக நீதி என்பது பிரதானமாக நம் முடைய இரண்டு பற்றுதல்களுக்குரிய காரியமாக இருக் கிறதென்று நாம் காண்கிறோம். அவைகளாவன *(1)* கடமை உணர்வு *(conscientiousness)*, *(2)* நல்லெண்ணம் அல்லது அன்பு. ஆகையால் நீதி என்பது தன்னலமற்ற நல்லெண்ணமாக இல்லாமல், கடமையான நல்லெண்ண மாக அல்லது கடமை அன்பாக இருக்கிறது. ஆகையால் நீதி என்பது பிரதானமாக இரண்டு மதரீதியான பற்று தல்களினால் உந்தப்படுகிறது *(motive)*. ஆனால் அது இந்த இரண்டு மதரீதியான உணர்வுகளை விட மேலான ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால் அவைகள் மட்டுமே அதில் இருந்திருந்தால், நீதி இந்த இரண்டு பற்றுதல்களாக மட்டுமே இருக்கும். அது அவ்வாறு இருந்தால், அது உணர்வின் *(feeling)* ஒரு காரியமாக மட்டுமே இருக்கும். இந்த இரண்டு பற்றுதல்கள் நீதியின் அடிப்படைகளாக இருக்கின்றன என்பது உண்மை. மேலும் அவைகளே அதை உந்தும் சக்திகளாக *(motive power)* இருக்கின்றன என்பதும் உண்மை. ஆனால் இந்த நோக்கங்கள் மட்டுமே இருந்தால் போதாது. அந்த நோக்கங்கள் தீர்மானங்களாக மாறுவதும் தேவையாகிறது. பலநேரங்களில் நோக்கங்கள் தீர்மானங்களாக மாறுவதில்லை. அதற்கும் மேலாக அவைகள் சிந்தனைகளாகவும் வார்த்தைகளாகவும் செயல்களாகவும் வெளிப்படுவதும் அவசியமானதாகும். ஏனென்றால் இவ்வித நோக்கங்கள் சித்தத்தைக் கையாண்டு தீர்மானங்களாகப் பிரதிகிரியை செய்ய அந்த சித்தத்தை வலியுறுத்த வேண்டும். ஏனென்றால் நம் முடைய தீர்மானங்கள் எப்போதுமே கடமை உணர்வு மற்றும் நல்லெண்ணத்தின் நோக்கங்களுக்கு இணக்கமாக இருப்பதில்லை. ஆனால் நம்முடைய தீர்மானங்கள் இந்த நோக்கங்களினால் வலியுறுத்தப்படுவது அவசியமான தாகும்.

*6.* இவ்வாறாகத் தூண்டப்படுகிற தீர்மானங்கள் அதற்கேற்றவாறு சிந்திக்க நம்முடைய அறிவாற்றலைத் தூண்டிவிடும். அதாவது நியாயமாகச் சிந்திக்கவும், அநியாயமாகச் சிந்திக்காமலிருக்கவும் நம்முடைய அறி வாற்றலைத் தூண்டிவிடும். அதற்கும் மேலாக நாம் அநியாயமான காரியங்களைப் பேசாதிருக்கவும், நியாய மான காரியங்களைப் பேசவும் இந்த தீர்மானங்கள் நம்முடைய நாவைக் கட்டுப்படுத்த வேண்டும். நாம் அநியாயமான காரியங்களைச் செய்யாதபடிக்கும், நியாய மான காரியங்களைச் செய்யும்படிக்கும் இந்த தீர்மானங் கள் நம்முடைய கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இறுதியாக, நாம் தப்பறையான மற்றும் அநீதியான பாதைகளைத் தவிர்க்கும்படிக்கும், சத்தியமான மற்றும் நீதியான பாதைகளில் நடக்கும்படிக்கும் இந்த தீர்மானங் கள் நம்முடைய பாதங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறாக நீதியின் உட்கூறுகள் அல்லது பகுதிகள் இவ்வாறாயிருக்கின்றன: *(1)* கடமை உணர்வு, *(2)* நல் லெண்ணம், மற்றும் அதற்கு இணக்கமான *(3)* தீர்மானங் கள், சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்கள்.

## நீதியின் இலக்குகள்

*7.* நீதியின் இலக்குகளை அறிந்து கொள்ளும் போது, அதை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடும். நீதியின் பிரதான இலக்கு தேவனாக இருக்கிறார். அதின் இரண்டாம் இலக்காக யெஷுஆ இருக்கிறார். அதற்குப்பிறகு மற்ற ஆவி ஜீவிகளும், விசேஷமாக நம்மைப் பாதுகாக்கும் தேவ தூதர்களும் நீதியின் இலக்குகளாக இருக்கிறார்கள். அதற்குப்பிறகு ஆதாமுக் குள்ளிருக்கிற சக மனிதர்கள் நீதியின் இலக்குகளாக இருக்கிறார்கள். அது பொதுவாக முழு மனுகுலத்தையும் அர்த்தப்படுத்தும். குறிப்பாக நம்முடைய கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள், நமக்கு அறிமுகமானவர்கள், விசேஷமாக

வறுமையிலிருப்பவர்களை அர்த்தப்படுத்தும். மேலும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற சக மனிதர்களும், விசேஷமாக நம்முடைய ஆவிக்குரிய பெற்றோர்கள், கணவன், பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள் நம்முடைய நீதியின் இலக்குகளாக இருக்கிறார்கள். நாம் மிருக ஜீவன்களையும் நம்முடைய நீதியின் இலக்குகளாக ஆக்கிக் கொள்ள வேண்டும். எழுதப்பட்டிருப்பதைப் போல் நீதிமான் தன் மிருகத்திடமும் இரக்கமுள்ளவனாயிருப்பான் *(நீதி. 12:10).*

*8.* நாம் மனுகுலத்தின் பல்வேறு ஸ்தாபனங்களுக்கும் நீதியைச் செலுத்தக் கடன்பட்டிருக்கிறோம். நாம் அரசாங்கத்தினிடம் நீதியாகச் செயல்பட வேண்டும். விசேஷமாக நம்முடைய அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் மரியாதை செலுத்தி, கனப்படுத்தி, அவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். வரிப்பணத்தைச் செலுத்தி, அதிகாரத்திலுள்ளவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். பெயர் சபையினிடமும், முதலாளி மற்றும் தொழிலாளி ஸ்தாபனங்களிடமும் நியாயமாகச் செயல்பட வேண்டும். ஒவ்வொருவனுக்கும் அல்லது ஒவ்வொரு காரியத்திற்கும் அவனுக்குரியதை அல்லது அதற்குரியதைச் செலுத்த வேண்டும்.

*9.* நாம் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொன்றுக்கும் செலுத்த வேண்டிய காரியம் வெவ்வேறாக இருக்கும். இவ்விதமான வெவ்வேறான கடமைகளின் மத்தியிலும், அவைகளுக்கு இணக்கமாகவும், நாம் ஒவ்வொருவனுக்கும் அவனுக்குரியதையும், ஒவ்வொன்றுக்கும் அதற்குரியதையும் செலுத்த வேண்டும். இவ்வாறாக நீதியின் அடிப்படையில் நாம் சிலருக்குக் கடன்பட்டதை விட மற்றவர்களுக்கு அதிகமாகக் கடன்பட்டிருக்கிறோம். நாம் மற்ற எவர்களுக்கும் கடன்பட்டிருப்பதைவிட தேவனுக்கு அதிகமாகக் கடன்பட்டிருக்கிறோம். அவருக்கு அடுத்த நிலையில் மற்ற எவர்களுக்கும் கடன்பட்டிருப்பதை விட அதிகமாக யெஷுஆவுக்குக் கடன்பட்டிருக்கிறோம். நாம் மற்றவர்களைக் காப்பாற்றும் தேவ தூதர்களுக்குக் கடன்பட்டிருப்பதை விட நம்மை காப்பாற்றும் தேவ தூதர்களுக்கு அதிகமாகக் கடன்பட்டிருக்கிறோம். ஆதாமுக்குள் நாம் மற்றவர்களுக்குக் கடன்பட்டிருப்பதை விட அதிகமாக நம்முடைய மனைவிக்கும் கணவனுக்கும் கடன்பட்டிருக்கிறோம். இவர்களுக்கு அடுத்த நிலையில் நம்முடைய பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும், அவர்களுக்கடுத்த நிலையில் சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும், அவர்களுக்கு அடுத்த நிலையில் நம்முடைய மற்ற உறவினர்களுக்கும், அடுத்த நிலையில் நம்முடைய நண்பர்களுக்கும் கடன்பட்டிருக்கிறோம். நாம் அந்நியர்களுக்குக் கடன்பட்டிருப்பதைவிட இவர்களுக்கு அதிகமாகக் கடன்பட்டிருக்கிறோம். நாம் அயல்நாட்டாருக்குக் கடன்பட்டிருப்பதைவிட நம்முடைய நாட்டவர்களுக்கு அதிக கடன்பட்டிருக்கிறோம். நாம் மற்ற அரசாங்கங்களுக்கும் அதிகாரிகளுக்கும் கடன்பட்டிருப்பதை விட அதிகமாக நம்முடைய அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் கடன்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் நாம் நம்முடைய உருவகமான கணவருக்கு மிக அதிகமாகக் கடன்பட்டிருக்கிறோம். அடுத்த நிலையில் நம்முடைய உருவகமான பெற்றோர்களுக்கும் கடன்பட்டிருக்கிறோம். அதற்கு அடுத்த நிலையில் நம்முடைய உருவகமான பிள்ளைகளுக்கும் சகோதரர்களுக்கும் கடன்பட்டிருக்கிறோம்.

*10.* இந்த வேறுபாடுகளுக்குக் காரணமென்னவென்றால் நாம் மற்றவர்களோடு வெவ்வேறான அளவில் நெருங்கி இருக்கிறோம் என்பதாகும். நாம் மற்றவர்களுக்கு எவ்வளவு அதிகமாக நெருங்கி இருக்கிறோமோ, அவர்கள் நமக்கு எவ்வளவு அதிகமாக நெருங்கி இருக்கிறார்களோ அதற்கேற்ப நாம் அவர்களுக்கு அதிகமாகக் கடன்பட்டிருக்கிறோம். நாம் மற்ற எல்லோரையும் விட தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் அதிகமாக நெருங்கி இருப்பதால், மற்ற அனைவரையும் விட அதிகமாக அவர்களுக்குக் கடன்பட்டிருக்கிறோம். பூமிக்குரிய உறவுகள் எல்லாவற்றிலும் கணவன் மனைவிக்கிடையிலுள்ள உறவு மிக நெருங்கியதாக இருப்பதால், அவர்கள் மற்றவர்களுக்குக் கடன்பட்டதை விட, ஒருவர் மற்றொருவருக்கு அதிகமாகக் கடன்பட்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கிடையிலுள்ள உறவும் நெருங்கியதாக இருப்பதால், நண்பர்களுக்கும் மற்ற உறவினர்களுக்கும் கடன்பட்டிருப்பதைவிட, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் ஒருவர் மற்றொருவருக்கு அதிகமாகக் கடன்பட்டிருக்கிறார்கள். இவ்வாறாக மற்றவர்களோடு நமக்கிருக்கும் வெவ்வேறு அளவான நெருக்கத்திற்கேற்ப, அவர்களைக் குறித்து உணரவும், அவர்களுக்காகச் சித்தங்கொள்ளவும், அவர்களைக் குறித்து சிந்திக்கவும், அவர்களிடம் பேசவும், அவர்களிடம் செயல்படவும் நீதி நம்மிடம் கோருகிறது என்று நாம் காண்கிறோம்.

## தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் செலுத்தவேண்டிய கடமை அன்பு

*11.* நீதியின் அடிப்படையில் நாம் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் நம்முடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் கடமை அன்பைச் செலுத்த வேண்டும். நீதியின் அடிப்படையில் முழு இருதயத்தோடு அவர்களிடம் அன்பு கூருவதென்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: நம்முடைய கலை ரீதியான, ஒழுக்க ரீதியான மற்றும் மத ரீதியான பற்றுதல்களின் ஒவ்வொரு செயல்பாடும், நாம் தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் வைத்திருக்கிற கடமையான நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். மேலும் இவ்வித ஒவ்வொரு வெளிப்பாடும் அந்த கடமையான நல்லெண்ணத்திற்கு ஆதரவளிக்க வேண்டும். நம்முடைய மத ரீதியான பற்றுதல்களை பொறுத்தவரை, நம்முடைய விசுவாசம், நம்பிக்கை, சுயகட்டுப்பாடு, பொறுமை, சகோதர சிநேகம், தியாக அன்பு ஆகியவைகள், நாம் தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். மேலும் இவைகள் அந்த அன்புக்கு ஆதரவளிக்க வேண்டும்.

*12.* நம்முடைய சுயம் சார்ந்த ஒழுக்க ரீதியான பற்றுதல்களைப் பொறுத்தவரை, சுயமதிப்பீடு, அங்கீகார விருப்பம், ஒய்வுக்கான விருப்பம், பாதுகாப்புக்கான விருப்பம், ரகசியம் காத்தல், பரிபாலன விருப்பம், சண்டையிடும் குணம், வலிய தாக்கும் குணம், ஆகாரத்திற்கான விருப்பம், ஜீவனில் பற்று ஆகியவற்றின் ஒவ்வொரு செயல்பாடும், தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் நாம் கொண்டுள்ள கடமை அன்பின் விளைவாக இருக்க வேண்டும். மேலும் இந்த செயல்பாடுகளெல்லாம் அந்த அன்புக்கு ஆதரவளிக்க வேண்டும். நம்முடைய சமூகம் சார்ந்த ஒழுக்க ரீதியான பற்றுதல்களைப் பொறுத்தவரை, நம்முடைய எதிர் பாலின விருப்பம், கணவன் மனைவிக்குரிய பற்று, பெற்றோரின்

பற்று, பிள்ளைகளின் பற்று, சகோதரருக்குரிய பற்று, நட்பு, வீட்டின் மேல் பற்று, தேசப்பற்று ஆகியவற்றின் ஒவ்வொரு செயல்பாடும் தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் நாம் கொண்டுள்ள கடமை அன்பின் விளைவாக இருக்க வேண்டும். மேலும் இந்த செயல்பாடுகளெல்லாம் அந்த அன்புக்கு ஆதரவளிக்க வேண்டும். நம்முடைய தீர்மானங்களும், சிந்தனைகளும், வார்த்தைகளும், செயல்களும் நாம் தேவன் மீதும், கிறிஸ்துவின் மீதும் கொண்டுள்ள கடமை அன்பின் வெளிப்பாடாக இருக்கும் போது, நாம் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய கடமை அன்பு சம்பந்தப்பட்ட கடமைகள் எல்லாவற்றையும் முழு இருதயத்தோடும் (எல்லா பற்றுதல்களோடும்) அவர்களுக்குச் செலுத்துகிறோம்.

*13.* நீதியின் அடிப்படையில் நம்முடைய கலை சார்ந்த பற்றுதல்கள் எல்லாவற்றுடன் அவர்களிடம் அன்பு கூருவதென்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: இயற்கையிலும் கலையிலுமுள்ள மேன்மையான மற்றும் அழகானவைகளுக்கான நம்முடைய விருப்பத்தின் ஒவ்வொரு செயல்பாடும், அதாவது இசை, கவிதை, ஓவியம், சிற்பக்கலை, கட்டிடக்கலை ஆகியவைகளும், சொற்பொழிவாற்றல், நடிப்பு, நகைச்சுவை, மற்றவர்களின் மனதிற்கு உகந்த தன்மை, கட்டுவதில் செயல்திறன் ஆகியவைகளும், தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் நமக்கிருக்கிற கடமை அன்பின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். மேலும் இந்த வெளிப்பாடுகளெல்லாம் அந்த அன்புக்கு ஆதரவளிக்க வேண்டும். மேலும் இவைகள் சம்பந்தப்பட்ட நம்முடைய தீர்மானங்களும், சிந்தனைகளும், வார்த்தைகளும், செயல்களும் அவர்கள் மீது நாம் கொண்டுள்ள கடமை அன்பின் விளைவாக இருந்து, அதற்கு ஆதரவு அளிக்கும் போது நாம் அந்த கடமை அன்பை நிறைவாக்குகிறோம்.

*14.* நம்முடைய முழு மனதோடு அவர்களிடம் அன்பு கூருவதென்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: நம்முடைய புரிந்து கொள்ளும் திறன், ஞாபகப்படுத்திக் கொள்ளும் திறன், கற்பனை செய்யும் திறன் மற்றும் பகுத்தறிந்து நிதானிக்கும் திறன் ஆகியவற்றின் ஒவ்வொரு செயல்பாடும் தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் நாம் கொண்டுள்ள கடமை அன்பின் விளைவாக இருக்க வேண்டும். மேலும் இந்த செயல்பாடுகளெல்லாம் அதற்கு ஆதரவளிக்க வேண்டும். மேலும் நம்முடைய தீர்மானங்களும், சிந்தனைகளும், வார்த்தைகளும், செயல்களும் இவ்வித அன்பின் வெளிப்பாடாயிருந்து, அதற்கு ஆதரவளிக்கும் போது, அவர்கள் மீது நாம் கொண்டுள்ள கடமை அன்பின் இந்த பகுதியை நிறைவாக்குகிறோம்.

*15.* நம்முடைய முழு ஆத்துமாவோடு அவர்களிடம் அன்பு கூருவதென்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு திறமையையும், தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் நாம் கொண்டுள்ள கடமை அன்பினால் செயல்படுத்தி, அந்த அன்புக்கு ஆதரவளிக்கும்படிச் செய்ய வேண்டும். மேலும் இதன் சம்பந்தமாக நம்முடைய ஒவ்வொரு தீர்மானமும், சிந்தனையும், வார்த்தையும், செயலும் இவ்வித கடமை அன்பின் வெளிப்பாடாயிருந்து அதற்கு ஆதரவளிக்கும் போது நாம் அந்த அன்பை நிறைவாக்குகிறோம்.

*16.* நீதியை பொறுத்தவரை, நம்முடைய முழு பெலத்தோடு அவர்களிடம் அன்பு கூருவதென்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: நம்முடைய சித்தத்தின் வல்லமையின் ஒவ்வொரு செயல்பாடும், அதாவது சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை அல்லது விடாமுயற்சியின் ஒவ்வொரு செயல்பாடும் இவ்வித கடமை அன்பின் விளைவாக இருந்து அதற்கு ஆதரவளிக்க வேண்டும். மேலும் நம்முடைய ஒவ்வொரு தீர்மானமும், சிந்தனையும், வார்த்தையும், செயலும் இவ்வித கடமை அன்பின் வெளிப்பாடாயிருந்து அதற்கு ஆதரவளிக்கும் போது அந்த அன்பை நிறைவாக்குகிறோம். இவ்வாறாகத் தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் நாம் செலுத்த வேண்டிய நீதியின் பிரமாணத்தை நாங்கள் சுருக்கமாக விளக்கினோம்.

## தேவனிடத்தில் நாம் கொண்டிருக்க வேண்டிய கடமை அன்பின் அடிப்படை

*17.* தேவனிடத்திலும் யெஷுவாவினிடத்திலும் நாம் இவ்விதமான கடமை அன்பையும், அதின் விளைவாக உண்டாகும் தீர்மானத்தையும், சிந்தனையையும், வார்த்தையையும், கிரியையையும் வெளிப்படுத்த வேண்டுமென்று தேவன் நம்மிடம் நீதியாகக் கோருவதற்கு உறுதியான அடிப்படை இருக்கிறது. தேவன் அதை நம்மிடம் கோருவது முற்றிலும் நியாயமானதாக இருக்கிறது. சிருஷ்டித்தலின் மூலமும் பரிபாலனத்தின் மூலமும் அவர் முழு மனுகுலத்திற்கும் செய்த நன்மையின் நிமித்தம் அவர் இதை நம்மிடம் கோருவது நியாயமானதாக இருக்கிறது. இந்த நன்மைகளில் சிலவற்றை நாம் கவனிப்போம்: நம்மை இருத்தலுக்குள் வர அனுமதிப்பதிலேயே அவர் கனிவாகச் செயல்பட்டார். பூமிக்குரிய இருத்தலின் மிக உயர்வான தளத்தில் மனுஷர்களாக ஜீவனைப் பெற்றுக் கொள்ள அனுமதிப்பதில் அவர் இன்னும் அதிக கனிவை வெளிப்படுத்தினார். ஏனென்றால் மனுஷர்களாக நாம் அற்புதமான உறுப்புகளும் திறமைகளுமுள்ள சரீரமுடையவர்களாக இருக்கிறோம். நம்முடைய மனமானது புரிந்து கொள்ளும், ஞாபகப்படுத்திக் கொள்ளும், கற்பனை செய்யும் மற்றும் பகுத்தறிந்து நிதானிக்கும் திறனுடையதாயிருக்கிறது. நம்முடைய இருதயமானது சுயம் சார்ந்த விதத்திலும் சமுதாயம் சார்ந்த விதத்திலும் அதிசயமான ஒழுக்க ரீதியான திறமைகளுடையதாக இருக்கிறது. மேலும் இயற்கையிலும் கலையிலுமுள்ள மேன்மையான மற்றும் அழகான காரியங்கள் சம்பந்தமான நம்முடைய இருதயமானது விசேஷமான கலை ரீதியான திறமைகளுடையதாகவும் இருக்கிறது. அதற்கும் கூடுதலாக நம்முடைய இருதயம் விசுவாசம், நம்பிக்கை, சுயக்கட்டுப்பாடு, பொறுமை, தேவபக்தி, சகோதர (அயலானுக்குரிய) சிநேகம் மற்றும் தியாக அன்பு ஆகிய மத ரீதியான திறமைகளுடையதாகவும் இருக்கிறது.

*18.* அழகான மற்றும் செழிப்பான ஒரு பூமியை நமக்கு இருப்பிடமாகக் கொடுப்பதில் அவர் கனிவாகச் செயல்பட்டார். நம்முடைய பூமிக்குரிய தேவைகளெல்லாவற்றையும் பூர்த்தி செய்வதற்காக அவர் பூமியில் சீதோஷணத்தையும், வாயு மண்டலத்தையும், வளமான நிலத்தையும், பாதுகாப்பையும், பொருட்களையும் மிகுதியாக ஏற்பாடு செய்திருக்கிறார். இக்காலத்தின் அனுகூலமான அரசாங்கம், பிரமாணங்கள் மற்றும் சூழ்நிலைகளின்கீழ் ஜீவனையும், சுயாதீனத்தையும், சந்தோஷத்தையும் பெரிதளவில் அனுபவிக்க அனுமதித்ததில் அவர் நம்மிடம் அன்பாக செயல்பட்டார். கல்வி ரீதியான சந்தர்ப்பங்களின் மத்தியிலும் தொழில் ரீதியாகவும் வியாபார ரீதியாகவும் மிகச் செழிப்பான சூழ்நிலைகளின் மத்தியிலும், மிகவும் செழிப்பான சூழ்நிலைகளின் மத்தியிலும் சிறந்த ஒரு நாகரீகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதும் தேவன் நமக்குக் கொடுத்த ஆசீர்வாதமாக இருக்கிறது.

இவைகளெல்லாம் சிருஷ்டித்தலில் அவர் நமக்குக் கொடுத்த சில ஆசீர்வாதங்களாக இருக்கின்றன.

*19.* பரிபாலன ரீதியிலும் அவர் மனுகுலத்திற்குப் பல நன்மைகளைக் கொடுத்திருக்கிறார். அவர் அவர்களுக்கு ஏற்ற உடையையும், உணவையும், இருப்பிடத்தையும் ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் மழையையும் சூரிய வெளிச்சத்தையும் கொடுத்திருக்கிறார். சாபத்தின் கீழுள்ள மனுகுலமானது வாழ்நாட்கள் முழுவதும் கடினமாக உழைக்கும்படி தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளாக இருந்தாலும், எந்த ஒரு அரசாங்கமும் அதின் குற்றவாளிகளை நடத்துவதை விட மிக சிறப்பாகத் தேவன் அவர்களை நடத்துகிறார். அரசாங்கத்தின் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படுகிற சிறந்த உணவையும், உடைகளையும், வீடுகளையும் தேவன் மனுகுலத்திற்கு அளிக்கிறார். அவர்கள் சரீர ரீதியாகவும், மனரீதியாகவும், கலை ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், மத ரீதியாகவும் முன்னேற்றமடைவதற்கு அவர்களுக்கு அதிக சுயாதீனத்தையும் சிறந்த சந்தர்ப்பங்களையும் அளிக்கிறார். மனுகுலத்தில் பெரும்பான்மையோரைப் பேரிடர்களிலிருந்து பாதுகாக்கிறார். அவர்களை ஒடுக்குபவர்களிடமிருந்து பாதுகாப்பதற்கு அவர்களைச் சுற்றி ஒரு வேலியை அமைக்கிறார். அனுதினமும் அவர்களுக்கு ஏராளமான நன்மையைச் செய்கிறார். இவ்விதமான நன்மைகளினால் தேவன் அவர்களை ஆசீர்வதிக்கும்போது, அவர் அவர்களுக்குச் செய்கிற நன்மைக்குப் பிரதிகிரியையாக அவர்கள் நன்றியறிதலுள்ள நல்லெண்ணத்தினால், முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அவரிடத்தில் அன்பு கூர வேண்டும்.

*20.* இந்த ஆசீர்வாதங்களுக்குக் கூடுதலாக மத ரீதியான ஆசீர்வாதங்களினாலும் அவர் அவர்களுக்கு நன்மை செய்திருக்கிறார். அவைகளில் சிலவற்றை முழு மனுகுலத்திற்காக ஏற்படுத்தி இருக்கிறார். அவர் முழு மனுகுலத்திற்காக அவருடைய அருமையான பொக்கிஷத்தைப் பரலோகத்திலிருந்து வெறுமையாக்கி, அவருடைய ஒரே பேறான குமாரரை, அவருடைய மடியிலிருக்கிற குமாரரை உலகத்திற்கு அனுப்பினார். பிதாவுக்கடுத்த நிலையிலுள்ள தன்மை, கனம் மற்றும் அலுவலை விட்டு, தாழ்வான நிலையிலுள்ள ஒரு மனிதனாகும்படி அவரை அனுப்பினார். இதற்குக் கூடுதலாக, பாவத்தினாலும் சீர்க்கேட்டினாலும் மரணத்தினாலும் தேவனுக்கு அந்நியராயிருக்கிற முழு மனுகுலத்தையும் மீட்டுக் கொண்டு, அவர்கள் நீதியையும் நித்திய ஜீவனையும் அடையும்படிக்கு தேவனோடு அவர்களை ஒப்புரவாக்கும் ஒரு மீட்பராக இருக்கும்படிக்குத் தேவன் அவரைப் பலியின் மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். இதற்கும் மேலாகக் கிறிஸ்துவின் பலியின் மூலம் நிச்சயிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளும்படிக்கு மனந்திரும்பி வர அவர் எல்லோரையும் அழைக்கிறார். நிச்சயமாகத் தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்பு கூர இந்த நன்மைகளெல்லாம் மனுகுலத்தைக் கட்டாயப்படுத்துகின்றன.

*21.* இந்த அழைப்புக்குப் பிரதிகிரியை செய்கிறவர்களுக்குத் தேவன் இன்னும் அதிக ஆசீர்வாதங்களை அளிக்கிறார். அவர் அளிக்கிற இந்த கிருபையான வாய்ப்புக்கு உண்மையாகப் பிரதிகிரியை செய்கிறவர்களை விட அதிகமானவர்களுக்குத் தேவன் நல்லெண்ணத்துடன் இந்த வாய்ப்பை அளிக்கிறார். அந்த ஆசீர்வாதங்கள் இவ்வாறாயிருக்கின்றன: *(1)* கிறிஸ்துவின் நிமித்தம் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கவும், *(2)* கிறிஸ்துவின் நீதியை அவர்களுடைய கணக்கில் எழுதவும், *(3)* அவர்களுக்குத் தம்முடைய ஐக்கியத்தை அளிக்கவும், *(4)* நீதியாக வாழ அவர்களுக்கு உதவவும், தேவன் அவர்களுக்குச் செய்த வாக்குத்தத்தத்தை, இருதயபூர்வமாக விசுவாசிக்கிற அனைவருக்கும், தேவன் இந்த நான்கு ஆசீர்வாதங்களை கிருபையாக அளிக்கிறார். தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்பு கூர இந்த ஆசீர்வாதங்கள் அவர்களை மேலும் கட்டாயப்படுத்துகின்றன. மேலும் இந்த கடமையை நிறைவேற்றவும் இந்த ஆசீர்வாதங்களே அவர்களுக்குக் கூடுதலான திறனையும் அளிக்கின்றன.

*22.* சுவிசேஷ யுக அழைப்பின் காலம் முழுவதிலும், விசுவாசத்தினால் நியாயமாகுதல் என்பதில் அடங்கியுள்ள இந்த நான்கு ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டவர்களை, பிரதிஷ்டை செய்யவும் தேவன் அழைத்தார். தேவனுடைய திட்டத்திற்காகப் பாடுபடுவதற்காகவும், கிறிஸ்துவுக்கொத்த குணாம்சத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காகவும், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்க அவர்கள் தங்களைத் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்தார்கள். இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு, இவ்வாறு பிரதிஷ்டை செய்தவர்களைத், தெய்வீக தன்மைக்கு ஜெநிப்பிப்பதின் மூலம், தேவன் அவர்களை மேலும் ஆசீர்வதித்தார். கிறிஸ்துவுடன் பாடுபடவும் கிறிஸ்துவுக்குள் ஜீவனை அடையவும் அவர்களுக்குச் சந்தர்ப்பங்களை அளித்து, இந்த இரு காரியங்களை நிறைவேற்றுவதற்கான எல்லா உதவிகளையும் அவர்களுக்குக் கொடுத்தார். மேலும் தெய்வீக தன்மையையும், கிறிஸ்துவோடு உடன் சுதந்தரவாளியாக இருக்கும் நிலையையும் அடைவதற்கான நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தினார். இவ்விதமான பிரதிஷ்டையில் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருந்தவர்கள் பெரிய வெகுமதிகளை அடைந்தார்கள். தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்பு கூர இவைகள் மேலும் அவர்களைக் கட்டாயப்படுத்துகின்றன. அதே நேரத்தில் இந்த கடமையை நிறைவேற்றவும் இந்த ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு அதிக திராணியை அளித்தன.

*23.* பிசாசு, உலகம் மற்றும் மாம்சத்தினால் அவர்களுக்கு எதிராகக் கையாளப்படுகிற பாவம், தப்பறை, சுயநலம், உலகத்தனம் ஆகியவற்றிற்கு அவர்கள் செய்யும் யுத்தத்தில், அடங்கியுள்ள ஒவ்வொரு சண்டையிலும் விசுவாச உண்மைத்துவமாயிருப்பவர்களுக்குத் தேவன் வெற்றியை அளிக்கிறார். இறுதியாக இந்த யுத்தம் முழுவதிலும் அவர்களுக்கு வெற்றி அளிப்பார். தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்பு கூர இவைகளெல்லாம் அவர்களை மேலும் கட்டாயப்படுத்துகின்றன. மேலும் அவ்வாறு அன்பு கூரவும் அவர்களுக்கு அதிக திராணியை அளிக்கின்றன.

*24.* இவ்வாறாக வெவ்வேறான ஆசீர்வாதங்களின் மூலம், வெவ்வேறான அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு, தேவனுடைய கனிவை வெவ்வேறான அளவிற்கு ருசி பார்த்தாலும், தேவன் தங்களுக்குச் செய்த நன்மையின் நிமித்தம், தேவனிடத்திலும், கிறிஸ்து

வினிடத்திலும் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்பு கூர வெவ்வேறான அளவில் எல்லோரும் கடன்பட்டிருக் கிறார்கள். அவர்கள் நோக்கத்திலும், தீர்மானத்திலும், சிந்தனையிலும், வார்த்தையிலும், கிரியையிலும் அதைச் செய்யும்போது தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் நீதியை அப்பியாசிப்பார்கள்.

## சக மனிதர்களிடத்தில் செலுத்த வேண்டிய கடமை அன்பு

*25.* நாம் கடமை அன்பை, நீதியைச் செலுத்த வேண்டிய அடுத்த வகுப்பார் நம்முடைய சக மனிதர் களாவர். நாம் நம்மிடத்தில் அன்பு கூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூர வேண்டுமென்பதே கடமை அன்பின் பிரமாணமாகும் *(மாற். 12:31).* நாம் எல்லோரிட மும் ஒரே அளவான அன்பைச் செலுத்த வேண்டும் என்பதை இது அர்த்தப்படுத்தாது. ஏனென்றால் நாம் வெவ்வேறான அளவுகளில் மற்றவர்களிடம் நெருங்கி இருக்கிறோம். மற்றவர்களோடு நமக்கிருக்கும் நெருக்கத் தின் அளவானது, அவர்களிடத்தில் நாம் செலுத்த வேண்டிய அன்பைத் தீர்மானிக்கும். நாம் தீர்மானத்திலும், சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் ஒரு குறிப்பிட்ட நபரிடம் செயல்படும் அதே அளவிற்கு மற்ற அனைவரிடமும் செயல்பட வேண்டும் என்பதையும் இது அர்த்தப்படுத்தாது. ஏனென்றால் நாம் மற்றவர்களிடம் எந்தளவிற்கு நெருக்கமாக இருக்கிறோமோ அந்தள விற்கு அதிகமாக அவர்களிடம் வெளிப்படுத்தும் அன்பும், தீர்மானமும், வார்த்தையும், செயலும் இருக்க வேண்டும். நாம் தீர்மானத்தினாலும், சிந்தனையினாலும், வார்த்தையினாலும், செயலினாலும் நம்முடைய குடும்பத் தாரிடம் அன்பு கூரும் அளவிற்கு, அந்நியர்களிடம் அன்பு கூரக்கூடாது என்பது வெளிப்படையாக இருக்கிறது. மேலும் நம்முடைய இயலாமையின் காரணமாகக் கடமை அன்பினால் நாம் நம்முடைய குடும்பத்தாருக்குச் செய்ய வேண்டியதை, எல்லோருக்கும் செய்ய நம்மால் கூடாத தாக இருக்கும்.

*26.* நம்மிடத்தில் நாம் அன்பு கூருவதைப் போல பிறனிடத்திலும் அன்பு கூருவதென்பது எதை அர்த்தப் படுத்துகிறது என்று கர்த்தராகிய யெஷுஆ நமக்கு மத். *7:12-ம்* வசனத்தில் விளக்கி இருக்கிறார். நம்முடைய பிறன் விரும்புகிறது என்னவாக இருந்தாலும் நாம் அதை அவனுக்குச் செய்ய வேண்டுமென்பதை இவ்வசனம் அர்த்தப்படுத்தவில்லை. ஏனென்றால் பல நேரங்களில் தவறான ஒன்றை நாம் அவனுக்குச் செய்ய அவன் விரும்பக் கூடும். நாம் அவ்வாறு செய்தால் அவனுடைய சித்தம் நம்முடைய செயலை ஆண்டு கொள்ள அனுமதிக் கிறோம் என்பதை அர்த்தப்படுத்தும். ஆனால் பிரதிஷ்டை யில் நாம் தேவனுடைய சித்தத்தை நம்முடைய சொந்த சித்தமாக ஏற்றுக் கொண்ட போது மற்றவருடைய சித்தத்தை விட்டுவிட்டோம்.

*27.* நாம் விரும்புவதை நம்முடைய பிறனுக்குச் செய்ய வேண்டுமென்பதையும் இவ்வசனம் அர்த்தப்படுத் தாது. ஏனென்றால் சில நேரங்களில் நாமும் தவறான வைகளை விரும்புகிறோம். நாம் அவ்வாறு செய்தால் நம்முடைய விருப்பங்கள் நம்முடைய செயலை ஆண்டு கொள்ளும்படி செய்வதாகும். ஆனால் பிரதிஷ்டையில் நாம் தேவனுடைய சித்தத்தை நம்முடைய செயலை ஆண்டுகொள்ளும் காரியமாக ஏற்றுக் கொண்டோம். அப்படியானால் மத். *7:12*ம் வசனத்தில் சொல்லப்பட்ட கட்டளை எதை அர்த்தப்படுத்துகிறது? மத். *7:12-*ம் வசனத்திலும், மலை பிரசங்கத்தின் மீதியான பகுதியிலும் யெஷுஆ அவருடைய சீஷர்களிடம் பேசிக் கொண்டிருந் தார் என்று நாம் நினைவு கூரும் போது அதின் அர்த்தத்தை எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடும். அவருடைய சீஷர்கள் தேவனுடைய சித்தத்தைத் தங்களுடைய சொந்த சித்த மாக ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தார்கள். ஆகை யால் அவர்கள் தங்களுக்கென்று எதை விரும்ப வேண்டுமென்று தேவன் சித்தமுள்ளவராயிருப்பாரோ, அதை மட்டுமே அவர்கள் தங்களுக்கென்று விரும்புவார் கள். ஆகையால் இந்த கட்டளையின் பொருள் இவ்வாறாக இருக்கிறது: தேவனுடைய சித்தத்தை நம் முடைய சித்தமாக ஏற்றுக் கொண்டவர்களாக, மற்றவர் கள் நமக்கு எவைகளைச் செய்ய நாம் விரும்புவோமோ, அவைகளையே நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும்.

## நமக்கு என்ன செய்யப்படவேண்டும் என்று நாம் விரும்ப வேண்டும்?

*28.* மற்றொரு கேள்வி எழும்புகிறது: மத்.*7:12-*ம் வசனத்தை மனதில்கொண்டு, நாம் நம்முடைய பிறனிடத் திலும், அவன் நம்மிடத்திலும் இருப்பதாக்க கருதுவோம். அப்பொழுது சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலி லும் அவன் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று நாம் விரும்புவது தேவனுடைய சித்தமாயிருக்கும்? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: இந்த சூழ்நிலையில், நம்முடைய பறிக்கப்படக்கூடாத உரிமைகளை நாம் உபயோகிக்கும் போது, அவன் அதை மதித்துணர்ந்து, அதற்கு இடங்கொடுத்து அதைப் பாதுகாக்க வேண்டு மென்று தேவ சித்தத்தின்படி நாம் விரும்புவோம். அப் படியே அவனுடைய பறிக்கப்படக்கூடாத உரிமைகளை அவன் உபயோகிக்கும் போது, நாம் அதை மதித்துணர்ந்து, அதற்கு இடங்கொடுத்து அதைப் பாதுகாக்க வேண்டு மென்று தேவன் நம்மிடம் விரும்புகிறார்.

*29.* இந்த பறிக்கப்படக்கூடாத உரிமைகள் என்ன? தேவனைப் பொறுத்தவரை நம்மிடமிருந்து பறிக் கப்படக்கூடாத உரிமைகள் எதுவும் நமக்கில்லை. ஏனென் றால் ஆதாமுக்குத் தேவனிடமிருந்த உரிமைகள் எல்லா வற்றையும் பாவத்தினால் அவர் தனக்காகவும் நம் அனைவருக்காகவும் இழந்துவிட்டார். தேவனிடத்தில் நமக்கு எவ்வித உரிமைகளும் இல்லாவிட்டாலும், சக மனிதரைப் பொறுத்தவரை நம்மிடமிருந்து பறிக்கப்படக் கூடாத சில உரிமைகள் நமக்கிருக்கின்றன: இந்த உரிமை கள் நம்முடைய சரீர ரீதியான, மன ரீதியான, கலை ரீதியான, ஒழுக்க ரீதியான மற்றும் மத ரீதியான திறமை களுக்கொத்தவைகளாக இருக்கின்றன. இந்த திறமைகள் சம்பந்தமாக மற்றவர்களுக்கு இருக்கிற பறிக்கப்படக் கூடாத உரிமைகளை அவர்கள் உபயோகிப்பதற்கு ஒத்திசைவாக நம்முடைய இந்த திறமைகளை நாம் விரும்புகிறபடி உபயோகிக்க நமக்கு உரிமை உண்டு.

*30.* நம்முடைய சக மனிதருக்கு முன்பாக நம்மிடமிருந்து பறிக்கப்படக்கூடாத சரீர ரீதியான உரிமைகள் நம்முடைய உடல் நலம் சம்பந்தப்பட்டவை களாக இருக்கின்றன. அவைகளாவன: உணவு, உடை, இருப்பிடம், ஆரோக்கியம், ஜீவன், உடற்பயிற்சி, வேலை, ஓய்வு ஆகியவற்றிற்கான உரிமைகள். ஆனால் மற்றவர் கள் தங்களுடைய உரிமைகளை உபயோகிப்பதற்கு

ஒத்திசைவாக, நாம் நம்முடைய இந்த உரிமைகளை உபயோகிக்க வேண்டும். நம்மிடமிருந்து பறிக்கப்படக் கூடாத மன ரீதியான உரிமைகள் நம்முடைய அறிவாற்றலின் நலம் சம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றன. மற்றவர்கள் அந்த உரிமைகளை உபயோகிப்பதற்கு ஒத்திசைவாக, நாம் நம்முடைய புரிந்து கொள்ளும், ஞாபகப்படுத்திக் கொள்ளும், கற்பனை செய்யும் மற்றும் பகுத்தறிந்து நிதானிக்கும் திறமைகளை உபயோகிக்கும் உரிமையை இது அர்த்தப்படுத்துகிறது. நம்மிடமிருந்து பறிக்கப்படக்கூடாத கலை ரீதியான உரிமைகள் நம்முடைய கலை ரீதியான திறமைகளின் நலம் சம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றன. மற்றவர்கள் தங்களுடைய உரிமைகளை உபயோகிப்பதற்கு இணக்கமாக, நாம் இயற்கையிலும் கலையிலுமுள்ள மேன்மையானவைகளின் மேலும் அழகானவைகளின் மேலும் கொண்டிருக்கிற விருப்பத்தையும், விசேஷமாகக் கவிதை, இசை, ஓவியம், சிற்பக்கலை, கட்டிடக்கலை, பேச்சுத்திறன், நகைச்சுவை, மற்றவர்களின் மனதிற்கு உகந்தத்தன்மை, கட்டுவதில் செயல்திறன் ஆகியவற்றிற்கான விருப்பத்தை நாம் விரும்பியபடி உபயோகிப்பதை இது அர்த்தப் படுத்துகிறது.

*31.* நம்மிடமிருந்து பறிக்கப்படக்கூடாத மத ரீதியான உரிமைகள் தேவனோடு நமக்கிருக்கும் பந்தம் சம்பந்தப்பட்டவைகளாகவும், சக மனிதனுக்குத் தேவனோடிருக்கும் பந்தத்தில் நாம் அவனோடு கொண்டிருக்கும் பந்தம் சம்பந்தப்பட்டவைகளாகவும் இருக்கின்றன. மற்றவர்களுடைய உரிமைகளுக்கு இணக்கமாக, நாம் நம்முடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும், சுயகட்டுப்பாட்டையும், தேவ பக்தியையும், சகோதர சிநேகத்தையும், தியாக அன்பையும் நாம் விரும்பியபடி உபயோகிப்பதை இது அர்த்தப்படுத்தும். நம்மிடமிருந்து பறிக்கப்படக்கூடாத ஒழுக்க ரீதியான உரிமைகள் நம்மோடு நாம் கொண்டிருக்கும் பந்தம் சம்பந்தப்பட்டவைகளாகவும், மற்றவர்களோடு நாம் கொண்டிருக்கும் பந்தம் சம்பந்தப்பட்டவைகளாகவும் இருக்கின்றன. மற்றவர்களுடைய உரிமைகளுக்கு இணக்கமாக, நாம் நம்முடைய சுயமதிப்பீட்டையும், அங்கீகார விருப்பத்தையும் ஓய்விற்கான விருப்பத்தையும் பாதுகாப்பிற்கான விருப்பத்தையும், ரகசியம் காத்தலையும், பரிபாலன விருப்பத்தையும், சண்டையிடும் குணத்தையும், வலிய தாக்கும் குணத்தையும், ஆகாரத்திற்கான விருப்பத்தையும், ஜீவனில் பற்றையும், எதிர்பாலின விருப்பத்தையும், கணவன் மனைவிக்குரிய பற்றையும், பெற்றோரின் பற்றையும், பிள்ளைகளின் பற்றையும், சகோதரருக்குரிய பற்றையும், நட்பையும், வீட்டின் மேல் பற்றையும், தேசப்பற்றையும் நாம் விரும்புகிறபடி உபயோகிப்பதை இது அர்த்தப்படுத்தும்.

*32.* ஒரு மனுஷனுக்கு மற்றொரு மனுஷனோடிருக்கிற பந்தத்தில், ஒருவர் மற்றொருவரின் உரிமைகளுக்கு இணக்கமாக ஒருவன் தன்னுடைய இந்த உரிமைகளை உபயோகிக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது. இவ்வாறாக நம்முடைய சக மனிதனோடு நாம் கொண்டிருக்கிற பந்தத்தில் மற்றவர்கள் நோக்கத்திலும், தீர்மானத்திலும் வார்த்தையிலும் செயலிலும் நமக்கு எதைச் செய்ய நாம் விரும்புவது தேவனுடைய சித்தமாக இருக்கிறது என்று நாம் அறிவோம். அதையே நாம் நம்முடைய சக மனிதனுக்குச் செய்ய வேண்டும். ஆகையால் இதுவே மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் என்ற வார்த்தைகளின் அர்த்தமாக இருக்கிறது.

*33.* இதுவே சக மனிதன் சார்ந்த விதத்தில் பொற்சட்டத்தில் நாம் செய்ய வேண்டிய காரியமாகும். நோக்கத்திலும் தீர்மானத்திலும் சிந்தனையிலும் வார்த்தையிலும் செயலிலும் நம்முடைய பிறனுக்கு நன்மை செய்ய இது நம்மை ஊக்குவிக்கும். ஆனால் இந்த பொற்சட்டத்தில் நாம் செய்யக்கூடாத ஒரு பகுதியும் இருக்கிறது. நோக்கத்திலும், தீர்மானத்திலும், சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் நம்முடைய பிறனுக்குத் தீங்கு செய்யாதபடி இது நம்மைத் தடுக்கும். ஏனென்றால் நோக்கத்திலும், தீர்மானத்திலும், சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் அவன் நமக்குத் தீங்கு செய்வதை நாம் விரும்புவதில்லை.

*34.* ஆகையால் நாம் பெற்றோர்களாக இருந்தால் இந்த வழிகளில் நம்முடைய பிள்ளைகளுக்குத் தீங்கு செய்யாதபடி இது நம்மைத் தடுக்கும். எடுத்துக்காட்டாகப் பிள்ளைகளை கொடுமையாக நடத்தாத படிக்கும், அவர்களை வெறுக்காதபடிக்கும், அவர்களுக்குத் தேவையானவைகளை ஏற்பாடு செய்வதை அசட்டை செய்யாதபடிக்கும், அவர்களுடைய சரீர, மன, கலை, ஒழுக்க மற்றும் மத ரீதியான பயிற்றுவித்தலை அசட்டை செய்யாதபடிக்கும், இது நம்மைப் பாதுகாக்கும். நாம் பிள்ளைகளாக இருந்தால், நம்முடைய பெற்றோரின் மேல் நம்பிக்கை வைக்காதிருப்பதையும், அவர்களை அவமதிப்பதையும், வெறுப்பதையும், அவர்களுக்குக் கீழ்ப்படியாதிருப்பதையும், அவர்களுடைய முதிர் வயதில் அவர்களுக்குத் தேவையானவைகளுக்கு ஏற்பாடு செய்வதை அசட்டை செய்வதையும் இது தடுக்கும்.

*35.* நாம் கணவர்களாயிருந்தால் நம்முடைய மனைவிகளைக் கொடுமையாக நடத்துவதையும், அவர்கள் மேல் நம்பிக்கை வைக்காதிருப்பதையும், அவர்களைக் கனப்படுத்தாமலிருப்பதையும், அவர்களுக்கு மரியாதை செலுத்தாதிருப்பதையும், அவர்களை வெறுப்பதையும், அவர்களுக்குத் தேவையானவைகளை ஏற்பாடு செய்வதை அசட்டை செய்வதையும் சரீர, மன, கலை, ஒழுக்க மற்றும் மத ரீதியாக அவர்களுடைய பயிற்சியை அசட்டை செய்வதையும் நம்முடைய திருமண பொருத்தனைகளுக்கு உண்மைத்துவமில்லாதிருப்பதையும் இது தடுக்கும். நாம் மனைவிகளாக இருந்தால் நம்முடைய கணவர்களை நச்சரிப்பதையும், அவர்கள் மீது நம்பிக்கை வைக்காதிருப்பதையும், அவர்களை கனப்படுத்தாதிருப்பதையும், அவமதிப்பதையும், வெறுப்பதையும், சரீர, மன,கலை, ஒழுக்க மற்றும் மத ரீதியாக அவர்களை அசட்டை செய்வதையும், நம்முடைய திருமண பொருத்தனைகளுக்கு உண்மைத்துவமில்லாதிருப்பதையும் இது தடுக்கும்.

*36.* நம்முடைய சக மனிதர்களைப் பொறுத்தவரை இது பின்வரும் காரியங்களை அர்த்தப்படுத்தும்: சரீர, மன,கலை, ஒழுக்க மற்றும் மத ரீதியாக நாம் அவர்களுக்கு எவ்விதத்திலும் தீங்கு செய்யக் கூடாது. மற்றொருவருடைய கணவனோ மனைவியோ அவனுடைய அல்லது அவளுடைய திருமண பொருத்தனைகளுக்கு உண்மைத்துவமில்லாதிருக்க நாம் அவர்களை எவ்விதத்திலும் தூண்டக் கூடாது. நாம் அவர்களுடைய உடலையோ உடைமைகளையோ எவ்விதத்திலும் சேதப் படுத்தக் கூடாது. அவர்களுக்கு எதிராகப் பொல்லாத சம்சயங்களை மனதில் வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களுடைய நோக்கங்கள், தீர்மானம், சிந்தனைகள், வார்த்தைகள், செயல்கள் ஆகியவற்றைக் குறித்து தீய எண்ணங் கொள்ளக் கூடாது. அவர்களுடைய நற்பெய

ருக்குத் தீங்கு விளைவிக்கும்படி நம்முடைய வார்த்தைகளையும், பார்வையையும், செய்கைகளையும், செயல்களையும் உபயோகிக்க கூடாது. அவர்களை எவ்விதத்திலும் தூஷிக்கவோ புறங்கூறவோ கூடாது. அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும்படி நம்முடைய செல்வாக்கை எவ்விதத்திலும் உபயோகிக்கக் கூடாது. அவர்களுடைய குடும்பம், வியாபாரம், சமூகம் ஆகிய வற்றிற்குரிய எதையும் நாம் தீமையாக விரும்பக் கூடாது. சக மனிதனைப் பொறுத்தவரை பொற்சட்டத்தில் நாம் செய்யக் கூடாத காரியங்களைச் செய்யாதிருக்கும் போது தீமை எவ்வளவாய் தடுக்கப்படும்! இதைச் செய்ய தவறினதால் எவ்வளவு தீமை உண்டாயிருக்கிறது. இந்த பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும் போது அந்த தீமை எல்லாம் மறைந்துபோகும்.

## பொற் சட்டத்தின் செயல் எல்லை

*37.* தேவனிடத்திலும் சக மனிதனிடத்திலும் நிறைவேற்ற வேண்டிய இந்த பொற்சட்டம் என்னே நலம் விளைவிக்க கூடியதாயிருக்கிறது! தேவனிடத்திலும், சக மனிதனிடத்திலும் நமக்கிருக்கிற பந்தத்தில், நம்முடைய ஒவ்வொரு நோக்கத்தையும், தீர்மானத்தையும், சிந்தனையையும், வார்த்தையையும், செயலையும் நீதிக்கிணக்கமாக ஒழுங்குப்படுத்தும். இந்த பொற் சட்டமானது அதை உருவாக்கினவரின் சர்வ ஞானத்திற்கு உறுதியான சான்றாயிருக்கிறது. ஏனென்றால் அது மிக சுருக்கமான வார்த்தைகளில் சொல்லப்பட்டிருந்தாலும், தேவன், கிறிஸ்து, தேவ தூதர்கள், சக மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் ஆகியவைகளோடு மனிதனுக்கிருக்கும் பந்தத்தில் அடங்கியுள்ள ஒவ்வொரு ஒழுக்க ரீதியான நோக்கம், தீர்மானம், சிந்தனை, வார்த்தை மற்றும் செயல் சம்பந்தப்பட்ட நீதி முழுவதையும் உள்ளடக்கியதாயிருக்கிறது. ஒழுக்க ரீதியான சுயாதீனமுள்ள ஒருவன் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும், அவனுக்கிருக்கிற பந்தங்களில் இந்த பொற்சட்டத்தின் செயல் எல்லையின் கீழ் வராத ஒரு காரியத்தையும் கற்பனை செய்வது கூடாத காரியமாக இருக்கிறது.

*38.* மனிதனுக்குத் தன் சக மனிதனோடிருக்கும் வெளிப்படையான பந்தங்களை மட்டுமே ஆண்டு கொள்வதற்கு மனிதர்கள் சட்ட பிரமாணங்களை உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பிரமாணங்களைக் குறித்து வைப்பதற்கே ஆயிரக் கணக்கான பெரிய புத்தகங்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் இந்த பந்தங்களில் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிற சிக்கல்களுக்குத் தீர்வு காண தொடர்ந்து சட்ட பிரமாணங்களைக் கூட்டிக் கொண்டே இருக்கிறார்கள். இருந்தாலும் மனிதனுடைய பறிக்கப்படக்கூடாத உரிமைகளுக்கு இணக்கமாக இந்த சிக்கல்களுக்குத் திருப்திகரமான தீர்வு செய்ய இயலாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தேவனோ "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" மற்றும் "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" *(மாற். 12:30,31)* என்ற இரண்டு சுருக்கமான வாக்கியங்களில், பகுத்தறிவுள்ள எல்லா ஜீவிகள் சம்பந்தமாகவும், தன்னுடைய மற்றும் மற்றவர்களுடைய மிருகங்கள் சம்பந்தமாகவும் கூட ஒவ்வொருவனுடைய நோக்கங்களையும், தீர்மானங்களையும், சிந்தனைகளையும் வார்த்தைகளையும் செயல்களையும் ஆண்டுகொள்ள வேண்டிய இரு பிரமாணங்களைக் கொடுத்திருக்கிறார்.

*39.* இரண்டாம் சட்டத்தில் தேவ தூதர்களோடு மனிதனுக்கிருக்கிற பந்தமும் அடங்கி இருக்கிறது. இக்காலத்தில் நாம் தேவ தூதர்களோடு ஐக்கியங் கொள்வதில்லை என்பது உண்மை. விழுந்து போன தூதர்களின் வஞ்சனைகளிலிருந்து நம்மைப் பாதுகாப்பதற்குத் தேவன் அதைத் தடை செய்திருக்கிறார். ஏனென்றால் இந்த விழுந்து போன தூதர்களில் நாம் நம்பிக்கை வைக்கும்படிச் செய்து நம்மை எளிதாகத் தவறாக நடத்தும்படிக்கு அவர்கள் நல்ல தேவ தூதர்களைப் போல் பாசாங்கு செய்யக் கூடும். நாம் தேவ தூதர்களோடு ஐக்கியங் கொள்ளவில்லையென்றாலும் அவர்களிடம் நல்லெண்ணமுடையவர்களாக இருக்க வேண்டும். ஆகையால் தேவ தூதர்களிடமும் நான் பொற்சட்டத்தைக் கடைப்பிடித்து அவர்கள் செயல்படும் வழியில் எவ்வித இடையூறுகளையும் வைக்காமல், அவர்களுடைய ஊழியத்திற்கு ஆதரவாக அவர்களுக்கு உதவ வேண்டும். நம்மைக் காக்கும் தேவ தூதர்களுக்கு இது விசேஷமாகப் பொருந்தும். நாம் ஒரு வேளை அவர்களின் இடத்திலும் அவர்கள் நம்மிடத்திலும் இருந்திருந்தால் அவர்கள் செய்திருக்கக் கூடிய வேலையை, நாம் செய்ய தவறுவதால் அவர்கள் நமக்குச் செய்யும் ஊழியம் பல நேரங்களில் தடைப்படுகிறது. அதினால் அவர்கள் நமக்காக அதிகமாக வேலை செய்ய வேண்டியதாயிருக்கிறது.

*40.* பொற்சட்டத்தின் இரண்டாம் பகுதியானது மிருகங்களோடு நமக்கிருக்கும் பந்தங்களோடும் பொருந்தும். நாம் அவைகளினிடத்திலிருந்து, அவை நம்முடைய இடத்திலிருந்திருந்தால் நமக்கு என்ன செய்யப்பட வேண்டுமென்று நாம் விரும்புவோமோ அதையே நாம் அவைகளுக்குச் செய்ய வேண்டும். நாம் இரக்கமாகவும், கனிவாகவும் நடத்தப்படுவதை விரும்புவதைப் போல் நாம் அவைகளிடம் இரக்கமாகவும் கனிவாகவும் செயல்பட வேண்டும். நமக்கு உதவும் மிருகங்களிடம் நாம் இவ்வாறு இரக்கமாகவும், கனிவாகவும் செயல்படும் போது அவைகளும் நமக்கு அடங்கி இருந்து நம்மிடம் மென்மையாகச் செயல்படும். நாய்கள், குதிரைகள், மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பறவைகள் முதலியவைகளோடு செயல்படுகிற அநேகர் இதை அறிவார்கள்.

*41.* நாம் பொற்சட்டத்தை பிரயோகிக்கக்கூடிய செயல் எல்லையில் ஆவி ஜீவிகளும், மனுஷரும், ஊரும் பிராணிகளும், மீன்களும், பறவைகளும் மிருகங்களும் இருக்கின்றன. இவைகள் எல்லாவற்றிடமும், விசேஷமாக முதலாம் மற்றும் இரண்டாம் வகுப்பார்களிடம் நாம் நீதியாகச் செயல்பட வேண்டும். முதலாவதாகத் தேவனோடும், கிறிஸ்துவோடும் நமக்கிருக்கிற எல்லா பந்தங்களிலும் அவர்களுக்கு நம்மோடிருக்கிற எல்லா பந்தங்களிலும், அதாவது சிருஷ்டித்தல், பரிபாலனம், மீட்பு, பிரகாசிப்பித்தல், நியாயமாக்குதல், பரிசுத்தமாக்குதல் மற்றும் விடுதலையாக்குதல் போன்ற பந்தங்கள் எல்லாவற்றிலும் பொற்சட்டத்தின் முதலாம் பகுதியை நிறைவேற்றும்படி கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவ தூதர்களைப் பொறுத்தவரை, அவர்கள் நம்மேல் பரிபாலன அக்கறை கொள்கிறார்கள் என்ற செயல் எல்லையில், மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் நீதியாகச் செயல்பட வேண்டும். நம்முடைய சக மனிதர்களைப் பொறுத்தவரை அது நம்முடைய மனுஷீக பந்தங்கள் எல்லாவற்றிலும் செயல்படும். விசேஷமாக வீட்டிலும், நாட்டிலும், சபையிலும், பள்ளியிலும்,

வியாபாரத்திலும், தொழிலிலும், நிதி ரீதியாகவும், நம் முடைய சமுதாய மற்றும் மத ரீதியான அமைப்புகளிலும் நாம் நீதியாகச் செயல்பட வேண்டும்.

## நீதியின் சத்துருக்கள் மற்றும் அதின் தவறான உபயோகம்

*42.* ஞானம், வல்லமை மற்றும் அன்பு என்ற பண்புகளுக்கிருக்கிற அதே சத்துருக்கள் நீதிக்கும் இருக் கின்றன. பாவம் மற்றும் தப்பறை என்பவைகள் இந்த சத்துருக்களாக இருக்கின்றன. இவைகள் பிசாசு மாம்சம் மற்றும் உலகத்தினால் கையாளப்படுகின்றன. இந்த சத்துருக்கள் நீதியை அழிக்கவும், தடுக்கவும் தவறாகப் பயன்படுத்தவும் தவறாகச் சித்தரிக்கவும் முயலுகின்றன. தேவன், யெஷுஆ, தேவ தூதர்கள், மனுஷர்கள், நம் முடைய மற்றும் மற்றவர்களுடைய மிருகங்கள் ஆகியவற்றோடு நமக்கிருக்கும் பந்தங்களில் நம்முடைய நடத்தையை நீதிக்கிணக்கமாக ஒழுங்குப்படுத்துவதே நீதியின் நோக்கமாக இருக்கிறது. நாம் செய்யக் கூடாததைச் செய்வதின் மூலமும், செய்ய வேண்டியதைச் செய்யாதிருப்பதின் மூலமும், பாவம் செய்யும் போது, நீதி தவறாக உபயோகிக்கப்படுகிறது. மேலும் நீதியின் ஆவியை மீறி, எழுத்தின்படி அதை மிக கண்டிப்பாக அமல்படுத்துவதினால் பல நேரங்களில் நீதி தவறாக உபயோகிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக நமக்குரியது நமக்குக் கிடைக்க வேண்டுமென்று கண்டிப்பாகக் கோரி, இரக்கத்தை முற்றிலும் அசட்டை செய்வதென்பது நீதியைத் தவறாக உபயோகிப்பதென்பதாகும். ஏனென் றால் சாபத்தின் தீமையான சூழ்நிலைகளின் மத்தியில், நம்முடைய சக மனிதர்களோடு நமக்கிருக்கும் பந்தங் களில் நாம் இரக்கமாகச் செயல்பட வேண்டுமென்பதும் நீதியின் ஒரு கோரிக்கையாக இருக்கிறது *(மீகா 6:8).*

*43.* பிரதிஷ்டை செய்தவர்கள் சில நேரங்களில், மற்றவர்களின் உரிமைகளை அசட்டை செய்து, பலி செய்வதில் சமச்சீர்ப்படுத்தப்படாத வைராக்கியத்தை வெளிப்படுத்துவதினால் நீதியைத் தவறாக உபயோகிக் கிறார்கள். எடுத்துக்காட்டாகச் சத்தியத்தை இன்னும் அதிகமாகப் படித்து, அதற்கு ஊழியஞ் செய்வதற்காகத் தன் மனைவியினிடமும், தன் பிள்ளைகளிடமும் தனக் கிருக்கிற கடமையை அசட்டை செய்கிற கணவன் அல்லது தகப்பன், சத்தியத்தை இன்னும் அதிகமாகப் படித்து, அதற்கு ஊழியஞ் செய்வதற்காக தன் கணவரிட மும் தன் பிள்ளைகளிடமும் தனக்கிருக்கிற கடமையை அசட்டை செய்கிற மனைவி அல்லது தாய், சத்தியத்தை இன்னும் அதிகமாகப் படித்து, அதற்கு ஊழியஞ் செய்வதற்காக தன் பெற்றோர்களிடம் தனக்கிருக்கிற கடமையை அசட்டை செய்கிற பிள்ளைகள், சத்தியத்தை இன்னும் அதிகமாகப் படித்து பரப்புவதற்காக தன் முதலாளியிடம் தனக்கிருக்கும் தன் கடமையை அசட்டை செய்கிற வேலைக்காரன் - இவர்களெல்லாம் நீதியைத் தவறாக உபயோகிக்கிறார்கள். அதுபோலவே தான் செலுத்த வேண்டிய வரிப்பணத்தைச் செலுத்த முடியாத அளவிற்குச் சத்தியத்தைப் பரப்புவதற்குத் தாராளமாகச் செலவு செய்து அரசாங்கத்திடம் தனக்கிருக்கும் கடமையை அசட்டை செய்கிற குடிமகனும் நீதியைத் தவறாக உபயோகிக்கிறான். இவ்வாறு செய்கிறவர்கள் மற்றவர்கள் உரிமைகளைப் பலி செய்கிறார்கள். ஆகை யால் அவர்கள் அநீதியாகச் செயல்படுகிறார்கள். இவைகள் கொள்ளை பொருளினால் இடப்பட்ட தகன பலிகளாக இருக்கின்றன. தேவன் அவைகளைப் பெரிதும் வெறுக்கிறார் *(ஏசா. 61:8).* நாம் நீதியை இவ்வாறு தவறாகப் பயன்படுத்தாதபடி எச்சரிக்கையுள்ள வர்களாக இருப்போமாக. ஏனென்றால் அவ்வாறு செய்வது நமக்கு அதிக தீங்கை விளைவிக்கும்.

## நீதியின் பகுத்தறிவுக்கு இணக்கமான தன்மை

*44.* நாம் நீதியை வளர்த்துக் கொண்டு, அதை அப்பியாசிப்பது பகுத்தறிவுக்கு இணக்கமான ஒன்றாகும் என்பதைச் சுருக்கமாக கருத்தில் கொள்வோம்: தேவ னிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் நாம் முழு இருதயத் தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்பு கூர வேண்டுமென்ற நீதியின் முதல் பகுதி நிச்சயமாகப் பகுத்தறிவுக்கு இணக்கமானதாக இருக்கிறது. ஏனென்றால் எல்லா நன்மையின் ஊற்றாக இருக்கிற தேவனும், எல்லா நன்மையின் செயலியக்கி யாக இருக்கிற யெஷுஆவும், நாம் என்னவாக இருக் கிறோமோ எதையுடையவர்களாக இருக்கிறோமோ, என்னவாக இருக்க நம்பிக்கை கொள்கிறோமோ, எதை யுடையவர்களாக இருக்க நம்பிக்கை கொள்கிறோமோ, அந்த நன்மைகள் எல்லாவற்றையும் நமக்குக் கொடுத் திருக்கிறார்கள். சிருஷ்டிப்பிலும், பரிபாலனத்திலும், மீட்பிலும், போதனையிலும், நியாயமாகுதலிலும், பரிசுத்தமாகுதலிலும்,விடுதலையாகுதலிலும் அவர்கள் நமக்குச் செய்த நன்மைகள் எல்லாவற்றையும் நாம் சரியாகச் சிந்தித்துப் பார்க்கும்போது இதை உணர வேண்டும். இந்த நன்மைகளைப் பெற்றுக் கொண்ட தினால் நாம் என்னவாக இருக்கிறோமோ, எதையுடைய வர்களாக இருக்கிறோமோ, என்னவாக இருக்க நம்பிக்கை கொள்கிறோமோ, எதையுடையவர்களாக இருக்க நம்பிக்கை கொள்கிறோமோ, அவைகள் எல்லா வற்றிற்காகவும் அவர்களுக்குக் கடன்பட்டிருக்கிறோம். ஆகையால் நம்முடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத் தோடும் அவர்களிடம் அன்பு கூர்ந்து, அதற்கேற்ற தீர்மானங்களையும் சிந்தனைகளையும் வார்த்தைகளை யும் செயல்களையும் வெளிப்படுத்த வேண்டுமென்பதை அவர்களுடைய உரிமையாக அவர்கள் நம்மிடம் கோரு வதும், நம்முடைய கடமையாக நாம் அதை அவர்களுக்குச் செலுத்துவதும் முற்றிலும் தகுதியானதாக இருக்கிறது. ஆகையால் நீதியின் முதலாம் பகுதியைத் தேவன் நம்மிடம் கோருவதும், நாம் அதை அவருக்குச் செலுத் துவதும் பகுத்தறிவுக்கு இணக்கமான ஒன்றாகுமென்று இது நிரூபிக்கிறது.

*45.* நம்மை நாம் நேசிப்பதைப் போல் பிறனை யும் நேசிக்க வேண்டுமென்ற நீதியின் இரண்டாம் பகுதியும் பகுத்தறிவுக்கு இணக்கமானதென்று பல காரியங்கள் நிரூபிக்கின்றன. முதலாவதாக, நமக்கு எல்லா விதத்திலும் நன்மை செய்கிறவரும் நம்மை ஆண்டு கொள்கிறவருமான தேவன் அதை நம்மிடம் கோருகிறார் என்பதே அதைப் பகுத்தறிவுக்கு இணக்கமான ஒரு காரியமாக ஆக்குகிறது. நாம் நம்முடைய முழு இருதயத் தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்பு கூரவும், அதற்கேற்ற தீர்மானங் களையும் சிந்தனைகளையும் வார்த்தைகளையும் செயல் களையும் வெளிப்படுத்த அவருக்குக் கடன்பட்டிருப் பதினால், அவர் நிமித்தமாக, நாம் நம்மை நேசிப்பதைப்

போல் பிறனை நேசிப்பது பகுத்தறிவுக்கு இணக்கமான தாகும்.

*46.* நாம் நம்மை நேசிப்பதைப் போல் பிறனை நேசிப்பது பகுத்தறிவுக்கு இணக்கமானதாகும் என்பதற்கு இதுவே போதுமான காரணமாக இருந்தாலும், அதற்குக் கூடுதலான காரணத்தையும் தேவன் நமக்குக் கொடுக் கிறார். அதென்னவென்றால், நம்முடைய பறிக்கப்படக் கூடாத உரிமைகளை நம்முடைய சக மனிதர்கள் மதித் துணர்ந்து, அவைகளை நமக்களிக்க வேண்டும் என்பதை நிச்சயிக்கக் கூடிய ஒரே வழியானது, நாம் அவர்களுடைய பறிக்கப்படக்கூடாத உரிமைகளை மதித்துணர்ந்து அவை களை அவர்களுக்கு அளிப்பதென்பதாகும். இந்தக் காரியம் இவ்வாறாக இருக்கிறது: நாம் தொடர்ந்து மற்றவர்களோடு தொடர்புக்குள் வருவதால், அவர்கள் அவர்களுடைய பறிக்கப்படக்கூடாத உரிமைகளை உபயோகிப்பதும், நாம் நம்முடைய பறிக்கப்படக்கூடாத உரிமைகளை உபயோகிப்பதும் கிட்டத்தட்ட எப்பொழு துமே ஒன்று மற்றொன்றுக்கு முரண்பாடாயிருக்கும். இவ்வித முரண்பாடு அனுமதிக்கப்படக் கூடாது. இல்லா விட்டால் தீர்வு காண முடியாத ஒரு சண்டை நீடித்துக் கொண்டே இருக்கும். ஆகையால் ஒவ்வொருவனும் அவனுடைய பறிக்கப்படக்கூடாத உரிமைகளைச் சமாதானமாகவும், திருப்திகரமாகவும் நியாயமாகவும் உபயோகிப்பதற்கான ஒரே வழியானது, மற்றவர்கள் அவர்களுடைய இந்த உரிமைகளை உபயோகிப்பதை அவன் மதித்துணர்ந்து, அவர்களுக்கு விட்டுக் கொடுப் பதென்பதாகும். ஒருவன் தன்னை நேசிப்பதைப் போலவே மற்றவர்களை நேசிக்கும் போது மட்டுமே இது சாத்தியமாகும். ஆகையால் அவன் மற்றவர்களினிடத் திலும் மற்றவர்கள் தன்னுடைய இடத்திலும் இருக்கும் போது, மற்றவர்கள் அவனுக்கு வெளிப்படுத்த வேண்டு மென்று அவன் விரும்புகிற அதே தீர்மானங்களையும், சிந்தனைகளையும், வார்த்தைகளையும், செயல்களையும் அவன் மற்றவர்களிடம் வெளிப்படுத்த வேண்டும்.

*47.* இவ்வாறாகப் பொற்சட்டத்தின் இரண்டாம் பகுதியை அப்பியாசிப்பதற்கான இந்த இரண்டாம் காரணத்திலிருந்து நாம் பின்வரும் காரியத்தைப் புரிந்து கொள்கிறோம்: தேவன் எவ்வித அடிப்படையுமில்லாமல் தமது சர்வாதிகாரத்தை உபயோகித்து மனுகுலத்தின் மேல் விதித்த அடிப்படையில்லாத ஒரு பிரமாணமல்ல. மாறாக மனுஷர்களின் மத்தியிலுள்ள சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு அதின் அடிப்படையில் உருவாக்கின ஒரு பிரமாணமாக இருக்கிறது. ஆகையால் சக மனிதனிடம் நாம் நீதியாகச் செயல்படுவதற்கு இதுவே நம்முடைய நடத்தையைக் கட்டுப்படுத்த வேண்டிய மிக நியாயமான பிரமாணமாகும். இந்தப் பிரமாணத்தை நாம் கடைபிடித் தால், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள சண்டைகள் நிறைந்த அதிருப்திகரமான, துயரமான மற்றும் தவறான நடத்தையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரும். மேலும் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் மிகவும் சமாதானமான, திருப்திகரமான, மகிழ்ச்சியான மற்றும் நீதியான நடத்தைக்கு வழிவகுக் கும்.

## நீதியை அபிவிருத்தி செய்தல்

*48.* ஞானம், வல்லமை மற்றும் அன்பு ஆகிய வற்றைப் போலவே நீதி என்பது நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு குண நலனாகும். தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும், மற்றவர்களிடத்திலும் அதை வளர்த்துகொள்வதற்கான சிறந்த வழியானது, தேவனும் கிறிஸ்துவும் நீதியை எவ்வாறு அப்பியாசிக்கிறார்கள் என்பதைப் பயபக்தியோடு சிந்தித்து அதைப் பின்பற்று வதென்பதாகும். நீதியின் ஊற்றாகிய தேவனும், நீதியின் செயலியக்கியாகிய யெஷுஆவும், நீதியைக் கையாளுகிற ஒரு முறையை நாம் பின்பற்றக் கூடாது. அது பழி வாங்குதலைச் செயலாற்றுவதென்பதாகும். தவறைத் தண்டிப்பதின் மூலம் தேவனும், யெஷுஆவும் நீதியைக் கோருவது மிகவும் சரியானதாகும். ஏனென்றால் தேவன் ஈடற்ற உச்ச நிலையிலுள்ள நியாயப்பிரமாணிக்கராகவும், தெய்வீகப் பிரமாணத்தின் ஈடற்ற உச்ச நிலையிலுள்ள நியாயாதிபதியாகவும் இருக்கிறார். ஆகையால் தெய்வீக நீதியின் தண்டனைகளைத் தேவன் அமல்படுத்த வேண்டியதாயிருக்கிறது. அதில் யெஷுஆ தேவனுடைய செயலியக்கியாக இருக்கிறார். ஆகையால் அவர்கள் இருவரும் நீதியைக் கோருவதும், நீதியின் மீறுதல்களைத் தண்டிப்பதும் மிகவும் நியாயமானதாகும்.

*49.* நீதியைச் செயல்படுத்துவதற்குத் தேவன் மற்றும் யெஷுஆ மற்றவர்களைத் தண்டிப்பது நியாய மானதாக இருக்கிறது என்று வேத வசனங்கள் தெளிவாகக் குறிப்பிடும் அதே நேரத்தில், நமக்கு அவ்வித உரிமை முற்றிலும் இல்லை என்பதும் வேத வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன *(ரோம. 12:17,19-21)*. சிறுமந்தை அங்கத்தினர்கள் மகிமையில் யெஷுஆவோடு இணைக் கப்பட்ட பிறகு, தேவனுடைய செயலியக்கிகளாக நீதியின் தண்டனைகளை அமல்படுத்துவார்கள். ஆனால் மாம்சத்திலிருந்த போது, அவர்களுக்கும் அந்த உரிமை இல்லாதிருந்தது. ஆகையால் நீதியைச் செய்யும்போது நாம் தேவனையும், யெஷுஆவையும் பின்பற்ற வேண்டிய தாக இருந்தாலும், நமக்குத் தீமை செய்கிறவர்களைத் தண்டிப்பதில் நாம் அவர்களைப் பின்பற்றக் கூடாது. ஆனால் ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தவறு செய்யும்போது அவர்களைத் தண்டிப் பதும், அரசாங்கத்தின் அதிகாரிகள் தங்கள் பிரஜைகள் தவறு செய்யும்போது அவர்களைத் தண்டிப்பதும், தவறானது என்று நாம் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் இந்த செயல் எல்லைகளில் அவர்கள் தேவனுடைய செயலியக்கிகளாக இருக்கிறார்கள் *(ரோம. 13:4; நீதி. 13:24; 23:13, 14)*.

*50.* தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் நீதியை அபிவிருத்தி செய்து கொள்வதற்கான மற்றொரு சிறந்த வழியானது, சிருஷ்டிப்பிலும் பரிபாலனத்திலும் மீட்பிலும் போதனையிலும் நியாயமாகுதலிலும் பரிசுத்த மாகுதலிலும் விடுதலையாகுதலிலும் அவர்கள் நமக்குச் செய்த மிகுந்த தயவை நன்றியறிதலுடன் தியானித்து, அவ்வித தியானத்தின் தாக்கத்திற்கு நம்மைக் கீழ்ப்படுத்து வதென்பதாகும். அவர்களிடம் அன்பு கூரும் படிக்கும் அதற்கேற்ற தீர்மானங்களையும், சிந்தனைகளையும், வார்த்தைகளையும், செயல்களையும் வெளிப்படுத்தும் படிக்கும் இது படிப்படியாக நம்முடைய இருதயத்தையும் மனதையும் ஆத்துமாவையும் பெலத்தையும் நிரப்பும்.

*51.* தேவனும் கிறிஸ்துவும் அவர்களுடைய பிரஜைகளை எவ்வாறு நீதியாக நடத்துகிறார்கள் என்பதைத் தேவபக்தியோடு சிந்தித்து அதை பின்பற்று வது என்ற முதலாம் முறையானது, நம்முடைய பிறனிடத் தில் அன்பு கூரவும் நமக்குத் திராணி அளிக்கும். நாம் நம்முடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் தேவனிடத் திலும் கிறிஸ்துவினிடத்திலும் அன்பு கூர்ந்தால், நம் முடைய பிறனை நேசிப்பது அவர்களுடைய சித்தமாக

இருக்கிறதென்று நாம் உணருவது, நம்மை நேசிப்பது போல் பிறனை நேசிக்க நமக்கு நிச்சயமாக உதவும். அடுத்ததாக, நம்மிடமிருந்து பறிக்கப்படக்கூடாத அதே உரிமைகள் பிறனுக்கும் இருக்கின்றன என்பதையும், அவர்கள் நம்முடைய உரிமைகளை மதித்துணர்ந்து அவைகளுக்கு இடங் கொடுப்பதை நாம் விரும்புவதைப் போல் அவர்களும் அதையே விரும்புவார்கள் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்து, அந்த சிந்தனைக்கு நம்மைக் கீழ்ப்படுத்தும் போது, நம்மை நேசிப்பதைப் போல் அவர்களையும் நேசிக்க அது நமக்கு உதவும்.

### நீதி குறைக்கப்பட்டு அழிக்கப்படுவது

*52.* தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் மனுஷனிடத்திலும் நாம் வெளிப்படுத்த வேண்டிய நீதி குறைக்கப்பட்டு அழிக்கப்படக்கூடும்? பலவீனத்தினாலும், அறியாமையினாலும் செய்யப்படுகிற பாவங்களும், ஓரளவிற்குப் பெலவீனத்தினாலும் அறியாமையினாலும், ஓரளவிற்குப் விருப்பத்துணிவுடனும் செய்யப்படுகிற பாவங்களும் நீதியைப் பெரிதும் குறைக்கின்றன. ஏனென்றால் இவ்விதமான பாவங்கள் நீதிக்கு எதிரிடையான திசையில் செல்பவைகளாக இருக்கின்றன. நாம் அவைகளுக்கு எந்தளவிற்கு இடங்கொடுப்போமோ அந்தளவிற்கு அவைகள் நீதியைக் குறைக்கின்றன. ஏனென்றால் நாம் செய்ய வேண்டியதைச் செய்யாததினாலோ செய்யக் கூடாததைச் செய்வதினாலோ பாவஞ் செய்யும்போது, தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் நாம் கொண்டிருக்கிற கடமை உணர்வையும் அன்பையும் குறைக்கிறோம். நாம் அந்தப் பாவங்களை நேரடியாகத் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் விரோதமாகச் செய்தாலும், பிறனுக்கு எதிராகச் செய்வதினால் மறைமுகமாக தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் செய்தாலும், தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் நாம் கொண்டிருக்கிற கடமை அன்பும், கடமை உணர்வும் குறையும். நாம் செய்ய வேண்டியதைச் செய்யாததினாலோ, செய்யக் கூடாததைச் செய்வதினாலோ பிறனுக்கு எதிராகப் பாவஞ் செய்யும் போது, பிறனிடத்தில் நாம் கொண்டிருக்கிற கடமை உணர்வையும் அன்பையும் குறைக்கிறோம்.சிறிய பாவங்களும் கூட நீதியைக் குறைக்கிறவைகளாக இருக்கின்றன. சிறிய தப்பறைகளும் கூட தேவனிடத்திலும் மனிதரிடத்திலும் நமக்கிருக்க வேண்டிய நீதியின் கடமை உணர்வு மற்றும் நல்லெண்ணத்தின் கூர்மையான தன்மையை மந்தமாக்கக் கூடியவைகளாக இருக்கின்றன.

*53.* இதற்குக் கூடுதலாக நீதி என்பது முற்றிலும் அழிக்கப்படக் கூடும். முற்றிலும் விருப்பத்துணிவுடன் செய்யப்படும் பாவங்களினாலும், ஈடுபலியை மறுதலித்தல் மற்றும் பாவ நிவாரண பலியில் சபைக்குப் பங்கில்லை என்ற கொடிய தப்பறைகளினாலும் நீதி முற்றிலும் அழிக்கப்படுகிறது. இவைகள் மரணத்துக்கேதுவான பாவங்களாக இருக்கின்றன (எபி. 6:4-8;10:26-29; 1 யோவா.5:16). ஆகையால் சிறிய பாவங்கள் நமக்குள் துவங்கும் போதே அவைகளைக் கண்டு கொள்ளும் படிக்கு நாம் விழித்திருந்து ஜெபித்து, அவைகளை மேற்கொள்வோமாக. அவ்வாறு செய்யும்போது நீதியைக் குறைக்காத படிக்கும் அழித்துப் போடாத படிக்கும் நாம் பாதுகாக்கப்படுவோம்.

★★★★★★★★★★★★★★★★★★★★

# திராட்ச கிளைகளின் வளர்ச்சி

*PT May-June 1989, p.37-39*

*[1913-ம் வருடத்தில் ஆஷ்வில் (Asheville)என்ற இடத்தில் நடந்த கன்வென்ஷனில் பேசினவர்களில் பாஸ்டர் ஜான்சனும் ஒருவராயிருந்தார். அந்த கன்வென்ஷன் பற்றிய அறிக்கையில் அவருடைய பிரசங்கம் வெளியிடப்பட்டது. அதை இங்கே பதிவு செய்வதில் நாங்கள் மகிழ்ச்சி கொள்கிறோம்].*

*1.* இந்த பிரசங்கம் “கிளைகளின் வளர்ச்சியைப்” பற்றியதாக இருக்கிறது. அதை நாம் மூன்று பொதுவான தலைப்புகளின் கீழ் பார்ப்போம்: (1) வளர்ச்சிக்குத் தேவையான காரியங்கள், (2) வளர்ச்சியின் தன்மை, (3)வளர்ச்சியின் விளைவுகள். இவைகள் ஒவ்வொன்றும் பல பிரிவுகளின் கீழ் கருதப்படக்கூடும்

வளர்ச்சிக்கு தேவையான காரியங்கள்

(1) சீதோஷண நிலை, மழை, சூரிய வெளிச்சம்
(2) திராட்சச் செடியில் நிலைத்திருப்பது
(3) சாறை உள்வாங்கிக் கொள்வது
(4) சாறைத் தக்க வைத்துக் கொள்வது
(5) செத்த கிளைகளை நறுக்கி போடுவது
(6) அடித் தண்டிலிருந்து அல்லது வேரிலிருந்து கிளம்பும் முளைகளை (குருத்துக்கள்) நறுக்கி போடுவது
(7) சரியான கிளை நறுக்குதல்

வளர்ச்சியின் தன்மை

(1) கிளைகளின் வளர்ச்சி
(2) இலைகளின் வளர்ச்சி
(3) பூக்களின் வளர்ச்சி
(4) கனிகளின் வளர்ச்சி


வளர்ச்சியின் விளைவுகள்

(1) தேவனுக்கு மகிமை
(2) கிறிஸ்துவுக்கு மகிமை
(3) உலகத்திற்கு ஆசீர்வாதம்

## வளர்ச்சிக்கு தேவையான காரியங்கள்

### (1) சீதோஷண நிலை, மழை, சூரிய வெளிச்சம்

*2.* இயற்கையான திராட்சச் செடியின் கிளைகள் மழை இல்லாமல் வளர முடியாது. அதுபோலவே உண்மையான திராட்சச் செடியின் அங்கத்தினர்களாகிய நமக்குத் தேவனுடைய பரிசுத்த ஆவியின் மழை மிகவும் அவசியமானது. அடுத்ததாக இயற்கையான கிளைகளின் வளர்ச்சியில் அவைகள் வெளிப்பட்டு, ஆரோக்கியமாக வளருவதற்குப் பகலும் இரவும் அடுத்தடுத்ததாக வருவது தேவையாயிருக்கிறது. அதுபோலவே நமக்கும் தேவ அன்பென்னும் பகலின் வெளிச்சமும், உபத்திரவமென்னும் இரவும் தேவையாயிருக்கின்றன. பகலின் உஷ்ணம் கிளைகளைக் கிட்டத்தட்ட உலர்ந்து போக பண்ணின பிறகு, இரவில் அவைகளுக்குப் புத்துணர்ச்சி



அளிக்கும்படிக்குத் தம்முடைய பனியை அனுப்புவதைப் போல், உண்மையான திராட்சச் செடியின் கிளைகளும் சோதனை என்னும் உஷ்ணத்தினால் கிட்டத்தட்ட உலர்ந்து போக தேவன் அனுமதித்தாலும், அதற்குப்பிறகு அவருடைய பரிபாலனம் என்னும் பனியையும் நமக்குக் கொடுக்கிறார். அதன் மூலம் நாம் புத்துணர்ச்சி அடைந்து மறுநாளில் மற்றொரு அனுபவத்தைப் பெற ஆயத்த மாயிருப்போம்.

### *(2)* திராட்சச் செடியில் நிலைத்திருப்பது

*3.* இயற்கையிலோ ஆவிக்குரிய ரீதியிலோ கிளைகள் செடியில் நிலைத்திராவிட்டால், அவைகள் வளர முடியாது. நாமும் அவருக்குள் நிலைத்திருக்க வேண்டும். நம்முடைய சித்தம் மரித்திருக்க வேண்டுமென் பதையும், அவருடைய சித்தம் நம்மில் வேகமாகக் கிரியை செய்ய வேண்டுமென்பதையும், அவருடைய ஆவி நம் முடைய சிந்தனைகளை வழி நடத்த வேண்டுமென் பதையும் இது அர்த்தப்படுத்துகிறது. நம்முடைய அபூரணங்கள் எல்லாவற்றையும் மூடுவதற்காக, நம்மை நியாயமாக்குகிறவராகிய அவருக்குள் நாம் நிலைத்திருக்க வேண்டும். நாம் அபூரணர்களாயிருக்கிறோம். ஆகையால் தேவன் நமக்காக ஒரு மீட்பரை ஏற்பாடு செய்திருக்கிறார். அவருக்குள் நிலைத்திருப்பதென்பதின் மையக் கருத்தே, நம்முடைய சித்தம் மரித்திருப்பதென்பதாகும். நாம் நம்முடைய சித்தத்தையோ உலகத்தின் சித்தத்தையோ ஏற்றுக் கொள்ளாமல் கர்த்தருடைய சித்தத்தை மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் அவருக்குள் தொடர்ந்து நீடித்திருக்கும் போது அவரே நம்முடைய நியாயமாகு தலாகவும், ஞானமாகவும், பரிசுத்தமாகுதலாகவும், விடுதலையாகவும் இருப்பார். இல்லாவிட்டால் நாம் கிறிஸ்துவின் கனிகளைக் கொடுப்பவர்களாக இருக்க முடியாது.

### *(3)*சாறை உள்வாங்கிக் கொள்வது

*4.* நாம் சாறை உள்வாங்கிக் கொள்வது என்பது மூன்றாம் நிபந்தனையாக இருக்கிறது. கிளையில் குறைந்து போன சில முக்கியமான பொருட்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு, நிலத்திலிருந்து வரும் சில பொருட்கள் அந்த சாறிலிருக்கும். அது கிளைகள் மேலும் வளருவதற்கு உதவும். ஆகையால் அந்தச் சாறு கிளைகளில் நிலைத்திருந்து, அவைகள் வழியாகச் செல்ல வேண்டும். நம்முடைய காரியமும் அவ்வாறே இருக்கிறது. கிறிஸ்துவின் மூலம் நாம் பெற்றுக் கொள்கிற தேவ வார்த்தை மற்றும் ஆவி இந்த சாறாக இருக்கிறதென்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். இயற்கையான திராட்சச் செடியானது, வருடத்தின் வெவ்வேறு பருவங்களில் வெவ்வேறான பொருட்களை நிலத்திலிருந்து பெற்றுக் கொள்ளும். அந்தப் பொருட்களுக்கு ஏற்றவாறு சாறின் அடர்த்தி வெவ்வேறாக இருக்கும். அதுபோலவே நம்முடைய கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்ப காலத்தில் கர்த்தர் நமக்குத் தண்ணீரைப் போல இருக்கும் சாறைக் கொடுப்பார். அதற்குப்பிறகு இன்னும் பலமான சாறைக் கொடுப்பார், இறுதியாக மிகச் சிறந்த வகையான சாறைக் கொடுப்பார். ஆகையால் நாம் தொடர்ந்து அதிகமதிகமாக வளர்ந்து கொண்டே இருக்க வேண்டுமென்று அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். தேவ வார்த்தை இல்லாமல் நாம் வளருவது கூடாத காரியம்: அந்த வார்த்தையினால் நம்முடைய ஆரோக்கியம் காக்கப்படுகிறது. ஆகையால் தாழ்மையுள்ள இருதயங்களுடன் நம்மால் இயன்றவரை அதிகமாகவும் அடிக்கடியும் இந்த சாறை நாம் உள் வாங்கிக் கொள்ள வேண்டும். நம்மிடம் இருக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிற பரிசுத்த ஆவியின் விலையேறப்பெற்ற பண்புகளை உருவாக்குவதற்குத் தேவையான பலமான பொருட்களை நாம் அதிலிருந்து பெற்றுக் கொள்கிறோம்.

### *(4)* சாறைத் தக்கவைத்துக் கொள்வது - தேவ ஆவியையும் வார்த்தையையும் தக்க வைத்துக் கொள்வது

*5.* நான்காவது நிபந்தனை சாறைத் தக்க வைத்துக் கோள்வது என்பதாகும். நாம் இந்த சாறை எவ்வளவாய் உள்வாங்கி கொண்டாலும், அதைத் தக்க வைத்துக் கொள்ளவில்லையென்றால், நாம் வளருவது கூடாத காரியமாகும். சில நேரங்களில் சிறுவர்கள் திராட்சச் செடியிலிருந்து சாற்றைப் பெற்றுக் கொள்வதற் காகக், கிளைச் செடியோடு இணையும் இடத்தில் ஒரு சிறிய துளையைப் போடுவார்கள். ஆனால் இது அந்தக் கிளைக்குச் செடியோடிருக்கும் தொடர்பை அழிப்பதால் கிளை உலர்ந்து செத்துப் போகும். இந்தச் சிறுவர்கள் இயற்கையான கிளைகளுக்குச் செய்வதைப் போலவே மெய்யான திராட்சச் செடியோடு நமக்கிருக்கும்

தொடர்பை அழிக்க முயன்று மற்றவர்கள் சில நேரங் களில் துளைகளைப் போடுவார்கள். உலக ரீதியான காரியங்கள், குடும்ப கவலைகள், வியாபாரம் முதலிய வைகள் இவ்வாறு இருக்கக்கூடும். நாம் சாறைப் பெற்றுக் கொள்வதையும் தக்க வைத்துக் கொள்வதையும் தடுப்பதற்குப் பெரிய எதிராளியானவன் ஏதேனும் ஒரு விதத்தில் துளைகளைப் போட்டு மெய்யான திராட்சச் செடியோடு நமக்கிருக்கும் தொடர்பை அழிக்க நாடு வான். ஆகையால் சகோதரர்களே, இந்த துளைகளைப் போட நாம் இடங்கொடுக்காதிருப்போமாக.

*6.* இயற்கையான கிளைகளின் உருவகத்தில் காண்பிக்கப்படாத ஒரு காரியத்தை நாம் செய்ய வேண்டியதாயிருக்கிறது. திராட்ச தோட்டக்காரரோடு நாம் ஒத்துழைக்கும் போது, அந்த துளைகளெல்லாம் மூடப்படுவதை அவர் பார்த்துக் கொள்வார். தேவ வார்த்தையையும் அவருடைய ஆவியையும் நம்மிட மிருந்து பறிக்கக் கூடிய எந்த காரியமும் நம்முடைய வாழ்க்கைக்குள் வர இடங்கொடாதபடி நாம் கவனமுள்ள வர்களாயிருப்போமாக. சில நேரங்களில் அது நம்முடைய பெற்றோராகவோ, உறவினராகவோ, நண்பராகவோ இருக்கக் கூடும். மற்றவர்களோடு நமக்கிருக்கும் தொடர் பானது, நாம் கர்த்தருடைய வார்த்தையையும் அவருடைய ஆவியையும் பெற்றுக்கொண்டு தக்க வைத்துக் கொள் வதைத் தடுப்பதாக நாம் காணும்போது, உடனடியாக அந்தத் தொடர்பைத் தகர்ப்போமாக அவ்வாறு செய்யும் போது மட்டுமே நாம் வளரக்கூடும்.

*7.* இயற்கையான கிளைகள் அவ்வப்போது பயனற்ற பொருட்களைச் சேர்த்துக் கொள்ளும். கிளை அந்தப் பொருட்களை வெளியேற்றும் போது அது மரப்பட்டையாக மாறும். அந்தப் பயனற்ற பொருட்கள் கிளையிலேயே இருக்க அனுமதிக்கப்பட்டால், அந்த கிளைகள் செத்துப் போகும். ஆனால் சாறு அந்த கிளையில் நீடித்திருந்து, இந்த பயனற்ற பொருட்களை வெளியேற்றும் போது, செடியைப் பாதுகாக்கும் மரப் பட்டை உருவாகும். அதுபோலவே மெய்யான திராட்சச் செடியின் அங்கத்தினரான நாம் வளருவதற்காகத் தேவ வார்த்தை மற்றும் ஆவி என்னும் சாறைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். நம் ஒவ்வொருவரிலும் ஏதேனு மொரு விதத்தில் பயனில்லாத பல காரியங்கள் இருக் கின்றன: பெருமை, வீண் புகழ்ச்சி, தற்பெருமை, கவன மின்மை, சோம்பல், விருப்பத்துணிவு, சண்டை செய்யும் ஆவி, அழிவுண்டாக்கும் ஆவி, சுயநலம், சுயக்கட்டுப் பாட்டின்மை முதலியவை நம்மிலிருக்கின்றன. இவை களெல்லாம் வெளியேற்றப்பட வேண்டும். இந்த தீமையை வெளியேற்றுவதற்குத் தேவனுடைய வார்த்தை யும் ஆவியும் அவசியமானவைகளாக இருக்கின்றன. தீமையை அகற்றி அதின் இடத்தில் நன்மையை நிரப்பு வதே மிகச் சிறந்த வழியாகும். அவ்வாறு செய்யும்போது அது தீமையான சூழ்நிலைகளுக்கெதிராக நம்மை பாது காக்கும் மரப்பட்டைக்கு ஒப்பாக மாறும். ஏனென்றால் அப்படிப்பட்ட காரியங்கள் இருப்பதைக் குறித்து நமக்குத் தொடர்ந்து நினைவுப்படுத்தி, அவைகள் மேலும் நமக் குள் நுழையாதபடி பாதுகாக்கும். நாம் அவைகளை அகற்றி அவைகள் நமக்கு வெளியே இருக்கும் போது, அந்த சூழ்நிலையைக் குறித்து விழிப்பாயிருக்க அவைகள் நமக்கு உதவும்.

*8.* நாம் தேவனுக்குள் கட்டப்படுவதற்கும், நமக்குச் சாறு தேவையாயிருக்கிறது. தேவ வார்த்தையை தன் இருதயத்திலும் மனதிலும் பாதுகாத்துக் கொள்கிற வன் குணநலன்களில் பலமடைந்து, கர்த்தருடைய சாயலில் மென்மேலும் வளருவான். மின்சாரமானது ஒரு கம்பியை உயிர்பித்து, பல்வேறு சூழ்நிலைகளில் வெப்பத் தையும், வெளிச்சத்தையும், அசைவையும் உண்டு பண்ணு வதைப் போலவே, தேவ வார்த்தையானது பரத்துக்குரிய மின்சாரமாக இருக்கிறது. நாம் அதற்கு இடங்கொடுத் தால் அது நமக்குள் ஒரு பெரிய வல்லமையை உருவாக்கும். நாம் நம்முடைய இருதயத்தையும், மனதை யும் கர்த்தருக்குக் கீழ்ப்படுத்தும்போது, அந்த சாறைத் தக்கவைத்துக் கொள்வோம்.

## *(5)* செத்த கிளைகளை நறுக்கிப் போடுவது

*9.* செத்த கிளைகளை நறுக்கிப் போடுவதென் பது ஐந்தாம் நிபந்தனையாயிருக்கிறது. அவைகள் ஏன் நறுக்கி போடப்பட வேண்டும்? ஏனென்றால் அவைகள் நறுக்கிப் போடப்படாவிட்டால், சாறானது செத்த கிளை களிலுள்ள விஷப் பொருட்களோடு தொடர்புக்குள் வந்து,அவைகளை நல்ல கிளைகளுக்குக் கொண்டு போகும். அதினால் நல்ல கிளைகளும் செத்துப் போகும். அதுபோலவே மெய்யான திராட்சச் செடியின் உருவக மான செத்த கிளைகளை நறுக்கிப் போடுவதும் அவசிய மானதாகும். கர்த்தரோடு அவர்களுக்கிருந்த உயிராதார தொடர்பைத் தகர்த்துப் போட்டவர்களை இந்த செத்த கிளைகள் குறிக்கின்றன. அவர்கள் கர்த்தர் மீது அன்பு கூருவதை விட்டு விட்டார்கள். ஆகையால் அவர் கள் மேலும் வளர இயலாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் எங்கு சென்றாலும் மரணத்தையே பரப்பு வார்கள்.

*10.* இந்த செத்த கிளைகளெல்லாம் நீக்கப்படும் படிக்கு நம்முடைய நல்ல தோட்டக்காரர் கவனமுள்ள வராயிருப்பார். சில வருடங்களுக்கு முன் (பாஸ்டர் ஜான்சன் காலத்தில்) பல செத்த கிளைகள் நறுக்கப் பட்டதை நாம் அறிவோம். அவர்களில் சிலர் நம்முடைய இருதயத்திற்கு மிகவும் நெருங்கினவர்களாக இருந்தார் கள். ஆனால் அவர்கள் நறுக்கப்படுவது நமக்கும் அந்த செத்த கிளைகளுக்கும் நன்மையானதென்றும், கனி களைக் கொடுக்க நன்மையானதென்றும் அறிந்து, மனப்பூர்வமாக அதற்கு நம்மை ஒப்புக் கொடுத்தோம். செத்த கிளைக்குள் நுழைந்த சாறினால் நாம் எவ்விதத் தினாலும் கறைப்படாதபடிக்குக் கவனமாக இருப்போ மாக. நாம் அவர்களோடு தொடர்பு கொண்டால் அது நமக்குத் தீங்கு விளைவிக்கும், அவர்களுக்கும் சந்தோ ஷத்தை அளிக்காது. ஆகையால் இந்த பிரிவு முழுமையான முறிவாக இருப்பது நலமானதாகும். நாம் அவர்களோடு தொடர்ந்து தொடர்பு கொண்டால், அவர் களிலுள்ள சாவுக்கேதுவான காரியங்கள், நமக்குள் வருவதால், நாம் வளர முடியாமல் போகும். அவர்கள் கனி கொடுக்காதிருப்பது மட்டுமல்ல மற்ற கிளைகளும் பரம பிதாவுக்குப் பிரியமான கனிகளைக் கொடுப்பதையும் தடுப்பார்கள். அவர்கள் நம்மோடு கலந்திருந்தால், அது பயனில்லாத வாக்குவாதங்களையும் கேள்விகளையும் எழுப்பும்.

## *(6)* குருத்துக்களை நறுக்கிப் போடுவது

*11.* ஆறாவது நிபந்தனை குருத்துக்களை நறுக்கிப் போடுவது என்பதாகும். குருத்துக்களென்பது தகாத இடங்களில் வளர தொடங்குகிற புது கிளை களாகும். அவைகளும் சாறை உறிஞ்சிக் கொள்ளும்,

ஆனால் கனிகளைக் கொடுப்பதில்லை. அவைகள் மற்ற கிளைகளிடமிருந்து போஷாக்கை உறிஞ்சி கொண்டு, அந்தக் கிளைகளின் கனிகளுக்கு தீங்கு விளைவிக்கும். இப்படிப்பட்டவர்கள் சபையிலும் இருப்பார்கள். ஆகையால் அவர்கள் அகற்றப்படும்படிக்குக் கர்த்தர் கவனமுள்ளவராயிருப்பார். இப்படி செய்யும்போது, சபையின் வகுப்புகளில் அவர்கள் நேர்மையாக நடத்தப்படவில்லை என்று எண்ணுவார்கள். அவர்களுடைய கருத்துக்கள் சிறந்தவைகளென்றும், அவைகளைப் புரிந்து கொள்வதற்கு வகுப்புகளிலுள்ள மற்றவர்களின் அறிவாற்றல் போதாது என்றும் எண்ணுவார்கள்.

## *(7)* சரியான கிளை நறுக்குதல்

*12.* இது குளிர் காலத்தின் கடைசியிலோ அல்லது வசந்த காலத்தின் ஆரம்பத்திலோ திராட்சச் செடிகளுக்குச் செய்யப்படும். திராட்ச தோட்டக்காரர் அபூரணமான கிளைகளை நறுக்குவார். மேலும் ஒரு கிளையில் உருவாக வேண்டிய கடைசி திராட்சைக் கொத்து ஓர் இடத்தில் தோன்றின பிறகு, அதற்கு அப்பாலுள்ள கிளையை அவர் நறுக்கிப் போடுவார். சாறு முழுவதும் கனிகளுக்குப் போஷாக்கு அளிக்கும்படி அதை ஒருமுகப்படுத்த கிளை நறுக்கப்படும். பரம பிதா நமக்கும் இதையே செய்கிறார்.

*13.* நாம் அனைவரும் பல்வேறு வழிகளில் விலகி செல்லும் இயல்புடையவர்களாயிருக்கிறோம். நாம் கட்டுப்படுத்தப்படுவது அவசியமானதென்று நம்முடைய பரம பிதா அறிகிறார். ஆகையால் தம்முடைய கூர்மையான கத்தியைக் கொண்டு இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சம் நறுக்குவார். முதலில் அவர் நம்மைப் பாபிலோனிலிருந்தும் உலகத்திலிருந்தும் பிரிப்பார். இது திராட்சப் பழங்கள் தோன்றுவதற்கு முன் செய்யப்படும் ஆரம்பகால கிளை நறுக்குதலுக்கு ஒப்பாக இருக்கிறது. அதற்குப்பிறகு, நம்மில் திராட்சப் பழங்கள் தோன்றின பின்பு, மேலும் கனி தருவதற்குத் தேவையில்லாத காரியங்களெல்லாம் நம்மிடமிருந்து நீக்கப்படும்படிக்குப் பரம பிதா கவனமாயிருப்பார். நாம் நமக்குத் தேவையான கிளை நறுக்குதலைப் பெற்றுக் கொள்வதை நாம் எல்லோரும் விரும்ப வேண்டும். நாம் மெய்யான திராட்சச் செடியில் நிலைத்திருக்கும் வரை, நமக்குத் தேவையான கிளை நறுக்குதல் முழுவதையும் திராட்ச தோட்டக்காரர் நமக்குக் கொடுப்பார். ஏனென்றால் நாம் கனி தர வேண்டுமென்று அவர் ஆர்வமுள்ளவராயிருக்கிறார். நாம் நம்முடைய சக்திகளைப் பல்வேறு காரியங்களில் செலவிட்டால் சரியான கனிகளைக் கொடுக்க இயலாதவர்களாயிருப்போம். திராட்ச தோட்டக்காரர் நம்மில் கிளை நறுக்குதலின் வேலையைச் செய்து முடித்த பிறகு நாம் மிகவும் அற்பமானவர்கள் என்று நமக்குத் தோன்றும். ஆனால் அதைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டாம். இந்த அனுபவங்களினாலே திராட்சச் செடி மிக சிறந்த கனிகளைக் கொடுக்கும்.

## வளர்ச்சியின் தன்மை

*14.(1)* கிளைகள்: முதலில் கிளைகள் வளரும், பரிசுத்த பேதுரு சொல்வதைப் போல் நாம் அறிவில் வளர வேண்டும். நம்முடைய வளர்ச்சி, இருதயம் சார்ந்த ஒன்றாக மட்டுமே இருக்கக் கூடாது. தேவனுடைய ஜனங்கள் அறிவையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். மேலும் எளிமையான காரியங்களை மட்டுமல்ல, ஆழமான காரியங்களையும் புரிந்து கொண்டு, அவர்கள் அறிவில் பெருக வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

*15.(2)* இலைகள்: அடுத்ததாக இலைகள் தோன்றும். இவைகளின் வளர்ச்சி விசேஷமான ஒன்றாக இருக்கிறது. முதலில் அவைகளெல்லாம் ஒரு சிறிய கொத்தாகச் சுருங்கி இருக்கும். அதற்குப்பிறகு அவைகள் படிப்படியாக விரிந்து வெளிப்படும். அது எத்தகையான செடி என்று பழக்கப்பட்டவர்கள் அப்போது அறிவார்கள். இலைகள் நம்முடைய விசுவாச அறிக்கையைக் குறிக்கின்றன. நாம் முதலில் மற்றவர்களுக்குச் சத்தியத்தைச் சொல்ல தொடங்கும்போது, அதைச் சுருக்கமாக மட்டுமே கூறக்கூடியவர்களாக இருப்போம். ஆனால் படிப்படியாக நாம் இலைகளைப் போல் விரியும் போது, நாம் எப்படிப்பட்டவர்கள் என்று மற்றவர்கள் நம்முடைய அறிக்கைகளிலிருந்து அறிந்து கொள்வார்கள்.

*16.(3)* பூக்கள்: அடுத்ததாகப் பூக்கள் மலரும். முதலில் அவைகள் அழகாகவோ, நறுமணம் வீசுபவைகளாகவோ இருப்பதில்லை. ஆனால் திராட்ச தோட்டக்காரருக்கு அவைகள் மிக அழகாக தோன்றும். ஏனென்றால் எதற்காக அவர் பல மாதங்களுக்குக் கடினமாக உழைக்க மனதாயிருந்தாரோ அது அந்த பூக்களுக்குள் இருக்கிறது என்று அவர் அறிவார். அநேகர் நம்மிலுள்ள குணநலன்களைத் தொலைநோக்கியைத் தலைக்கீழாகத் திருப்பிப் *(inverted telescope)* பார்ப்பதைப் போல் பார்ப்பார்கள். இப்படிச் செய்தால் பொருட்கள் இருப்பதை விட மிக சிறியதாக காணப்படும். நம்மிலுள்ள குணநலன்கள் அவர்களுக்கு மிக சிறியதாகத் தோன்றுவதால் அவைகள் அவர்களுக்குப் பிரியமாயிருப்பதில்லை. நம்முடைய பரம பிதாவோ, அவைகளைத் தம்முடைய பூத கண்ணாடியிலிருந்து *(magnifying glass)* பார்ப்பதைப் போல் பார்த்து அவைகளில் மிகவும் பிரியமாயிருப்பார்.

*17.(4)* கனிகள்: அடுத்ததாகக் கனிகள் தோன்றும். மலர்கள் படிப்படியாக உலர்ந்து போக தொடங்கினாலும் அவைகளில் நடுவிலுள்ள சிறிய பகுதி தொடர்ந்து நீடிக்கும். மழையும், சூரிய வெளிச்சமும், பனியும் அதின் மேல் விழுவதால், இலையுதிர் காலத்தில் நாம் இன்சுவை மிக்க சிறந்த திராட்சப் பழங்களைக் காண்போம். இவைகள் நம்மிலுள்ள குணநலன்களாகிய கனிகளை அடையாளப்படுத்துகின்றன. அவைகளில் பிதா மகிமைப்படுவார் (யோவா.15:8). திராட்ச பழத்தின் உருண்டை வடிவமானது குணாம்சத்தின் முழுமையான தன்மையைக் குறிக்கும். அதின் இன்சுவை மிக்க தன்மையானது ஆவியின் இந்த கனியின் பூரணத்துவத்தின் நிறைவைக் குறிக்கிறது. மிகச் சிறந்த வகையான கனியைக் கொடுப்பதென்பது நமக்களிக்கப்பட்ட மாபெரும் சிலாக்கியமாகும். தேவன் நமக்கு மிகுந்த நன்மையைச் செய்திருக்கிறார். நாம் அவரை எவ்வளவு துதித்தாலும், அவருக்கு எவ்வளவு ஊழியஞ் செய்தாலும் போதாது.

## வளர்ச்சியின் விளைவுகள்

*18.* நாம் சிறந்த கனிகளைக் கொடுக்கும்போது, முதலில் திராட்சத் தோட்டக்காரருக்கு மிகுந்த நன்மதிப்பு உண்டாகும். அது அவருடைய நற்பெயரை நீடிக்கச் செய்யும். தேவன் மகிழ்ச்சி அடைய வேண்டுமென்றும், அவருடைய நற்பெயர் பெருக வேண்டுமென்றும், அவருக்கு மகிமை உண்டாக வேண்டுமென்றும் நாம் விரும்புகிறோம். ஒரு கிளையானது கனிகளைக் கொடுக்காவிட்டால் அதற்கு எந்த மதிப்பும் இல்லை. கனியானது

திராட்சச் செடியின் மதிப்பையும் பெருகச் செய்யும். இவ்வாறாக நாம் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய கிறிஸ்து யெஷுஆவுக்குக் கனத்தையும், மகிமையையும் உண்டாக்குவதில் மகிழ்வோம். இறுதியாக நாம் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாக இருப்போம். மில்லினிய யுகத்தில் தேவனுடைய ராஜ்யம் முழு உலகத்திற்கும் புத்துணர்ச்சி அளிக்கும், திராட்ச ரசமாக இருந்து அவர்களைப் பெரிதும் ஆசீர்வதிக்கும்.

*19.* முடிவாக, “என்னில் நிலைத்திருங்கள்” (யோவா. 15:4) என்ற இந்த பாடத்தின் மையக் கருத்தை வலியுறுத்த நான் விரும்புகிறேன். நாம் அவ்வாறு நிலைத்திருக்கும்போது ராஜ்யத்தில் அவருடைய ஊழியக்காரர்களாக இருப்போம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

## ஒரு இரட்சண்ய நாள்
***BSQB p. 548,549***

ஏசா. 49:8-ம் வசனத்தில் சொல்லப்பட்ட “(ஒரு) இரட்சண்ய நாள் - *a day of salvation*” எதைக் குறிக்கிறது? :“பின்னும் கர்த்தர்: (ஒரு) அநுக்கிரக காலத்திலே நான் உமக்குச் செவிகொடுத்து, (ஒரு) இரட்சணிய நாளிலே உமக்கு உதவி செய்தேன்; நீர் பூமியைச் சீர்ப்படுத்தி, பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சுதந்தரிக்கப் பண்ணவும்…”.

*1.* இரு பெரிய இரட்சண்ய நாட்கள் இருக்கின்றன. ஒன்று சபையின் இரட்சண்ய நாளாகவும் மற்றொன்று உலகத்தின் இரட்சண்ய நாளாகவும் இருக்கிறது. அதினாலே யெஷுஆ “நம்முடைய (சபையின்) பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி…நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்” என்று பரிசுத்த யோவான் சொல்கிறார் (1யோவா. 2:2). தேவன் கர்த்தராகிய யெஷுஆவின் மூலம் “பூலோகத்தை (உலகத்தை) நீதியாய் நியாயந்தீர்ப்பதற்கு” ஒரு ஆயிர வருட நியாயத்தீர்ப்பு நாளைக் குறித்திருக்கிறார் (அப். 17:31; 2 பேது. 3:7, 8; வெளி. 20:4, 6). “அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும்” சாத்தான் “ஜனங்களை மோசம் போக்காதபடிக்குக்” கட்டப்பட்டிருப்பான் (வெளி. 20:2). “என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்” (ஏசா. 11: 9). இறுதியாக “இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்” (எரே.31:34).

*2.* ஏசா. 49:8-ம் வசனமானது இதற்கு முன் நிகழும் ஒரு நியாயத்தீர்ப்பு நாளாகிய சுவிசேஷ யுகத்தை குறிக்கிறது. சுவிசேஷ யுகத்தின் ஆரம்ப காலத்தில் பரிசுத்த பேதுரு இவ்வாறு கூறினார்: “நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங் காலமாயிருக்கிறது” (1பேது. 4:17). ஏசா. 49:8-ம் வசனத்தின் ஒரு பகுதியைப் பரிசுத்த பவுல் 2கொரி. 6:2-ம் வசனத்தில் எடுத்துரைக்கிறார். 2கொரி. 6:1,2-ம் வசனங்கள் சபை ஜீவனுக்காகப் பரீட்சிக்கப்படும் காலத்திற்கு, அதாவது சபையின் நியாயத்தீர்ப்பு நாளுக்குப் பொருந்தும் என்று அவர் காண்பிக்கிறார். அதின் சரியான மொழிபெயர்ப்பை டயகலாட் (*Diaglott*) =மொழிபெயர்ப்பிலிருந்து பார்ப்போம்: “ஒரு அனுகிரக காலத்திலே நான் உனக்கு செவி கொடுத்து, ஒரு ரட்சண்ய நாளிலே உதவி செய்வேன் என்று சொல்லி இருக்கிறாரே; இதோ இப்பொழுதே ஒரு அனுக்கிரக காலம், இப்பொழுதே ஒரு ரட்சண்ய நாள்” ***[In a Season acceptable, I listened to thee, and in a Day of Salvation I assisted thee.' Behold! now is a well-accepted Season; behold! now is a Day of Salvation"].*** ஆகையால் எபி. 4:7-ம் வசனத்தில் சொல்லப்பட்ட புத்திமதி தேவனுடைய ஜனங்கள் அனைவருக்கும் எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது. அது முழு சுவிசேஷ யுகத்திற்கும் பொருந்தும்: “இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்” (எபி. 3:13-ம் வசனத்தையும் பார்க்கவும்). சுவிசேஷ யுகமானது இரு இரட்சண்ய நாட்களில் பெரிதானதாக இருக்கிறது. ஏனென்றால் அது “பெரிதான இரட்சிப்பாகிய (எபி. 2:3) பரத்துக்குரிய இரட்சிப்பை அளித்தது. மில்லினிய யுகமோ முழு மனுகுலத்திற்குமுரிய பூமிக்குரிய இரட்சிப்பாகிய இழந்ததைத் திரும்பக் கொடுத்தலை அளிக்கும் (அப். 3:19-23; எண். 14:21; நீதி. 2:21).

★★★★★★★★★★★★★★★★★★★★★

**நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்.**

*ஏசா. 30:15*

***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

**புது உடன்படிக்கை**
*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*